
பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 27 வெள்ளிக்கிழமை 12.09.2025 கதிர் 306



## இது ரகசியம் அல்ல!

முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்ச நேற்றுத் தனது அரச இல்லத்திலிருந்து வெளியேறினார். அவர் மட்டுமல்ல மைத்திரி, சந்திரிகா ஆகியோரும்வெளியேறினார்கள். 2

# வெளியக விசாரணைப் பொறிமுறை இன்றேல் நீதி உறுதிப்படுத்தப்படாது

## சிறீதரன் எம்.பி. நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டு

டக்ளஸ் தேவானந்தாவுடன் 18 ஆண்டுகள் ஒன்றாக இருந்த சதா எனும்சுப்பையாபொன்னையாஎன்பவர் ' நிமலராஜன்,அற்புதன் . நிக்கிலாஸ் ஆகியோரை ஈ.பி.டி.பிதான்படுகொலை செய்ததுஎன்றுவெளிப்படையாககுறிப் பிட்டுள்ளார். இதற்கான விசாரணை கள் இடம்பெறுமா, ஆளும்தரப்பு இராணுவத்தை பாதுகாக்கவே முயற்சிக்கிறது. இலங்கை நீதியின் வழியில்செயற்பட்டிருந்தால்ஏன்வெளி யகவிசாரணைக்குதயாராகக்கூடாது? வெளியகபொறிமுறைக்குள்வராவிடின் இந்த நாட்டில் நீதி, சமாதானம் மற்றும் நல்லிணக்கம் எப்போதும் உறுதிப்படுத்தப்படாது. என்பதை தெளிவாக குறிப்பிட்டுக்கொள்கிறேன் எனஇலங்கைத்தமிழ்அரசுக்கட்சியின் யாழ்மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தேசிய கணக்காய்வு (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் 2

# உள்ளக விசாரணைக்கு ஐ.நாவின் தொழில்நுட்ப உதவி பெற தயார்

## அயலுறவுத்துறை அமைச்சர் அறிவிப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தொழில்நுட்ப உதவியுடன், இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறல் விவகாரத்தை உள்நாட்டுப் பொறிமுறையின் ஊடாக முன்னெடுக்க ஆளும்தரப்பு தயாராக உள்ளதாக அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத், ஐ.நா. மனித உரிமைகள் உயராணையர் வோல்கர் டர்க்கிடம் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது அமர்வில் கலந்துகொண்டுள்ள அமைச்சர் விஜித ஹேரத், நேற்றுமுன்தினம் புதன்கிழமை உயராணையர் வோல்கர்டர்க்கைச்சந்தித்துக்கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, உயராணையர்வோல்கர்சமர்ப்பித்த அறிக்கை தொடர்பில் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றதாகஅயலுறவுத்துறைஅமைச்சுஅறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் இலங்கை ஆளும்தரப்பின் நிலைப்பாட்டை அமைச்சர் ஹேரத் விரிவாகவிளக்கியுள்ளதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் புதிய ஆளும்தரப்பு மனித உரிமைகளைப்பாதுகாப்பதில்ஒருதிருப்புமுனையாக அமையும் என தான் நம்புவதாகவும், கடந்தகால மனித உரிமை மீறல்களை நிவர்த்தி செய்வதற்காக முறையான, சுயாதீனமான விசாரணை மற்றும் பொறுப்புக்கூறல் பொறிமுறையை நிறுவுவதற்கான வாய்ப்பை இலங்கை இழக்காது எனவும் உயர்ஸ்தானிகர் நம்பிக்கை 6

# மனித உரிமை மீறல்கள் விடயத்தில் உள்ள விசாரணையை ஏற்கமுடியாது

## நாடாளுமன்றில் செல்வம் எம்.பி. திட்டவட்டம்

மனித உரிமைகள் மீறல்கள் விடயத்தில் உள்ளக விசாரணையை ஏற்றுக்கொள்ள முடியாது. மனித உரிமை மீறல் தொடர்பில் இந்தியா தனது கருத்தை ஆழமாக பதிவு செய்துள்ளது. இதை பாராட்டுகின்றோம். மாகாண சபை முறைமை அரசியல் ரீதியிலான அதிகார பரவலாக்கலை செய்ய வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது. இதனை வரவேற்கின்றோம் என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற தேசிய கணக்காய்வு (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் வைத்தியசாலைக்கு 600 மில்லியன் ரூபா நிதியை வழங்கியுள்ள இந்தியாவுக்கு நன்றிகளை கூறிக்கொள்கின்றேன்.இதேவேளை தொடர்ந்தும் 40 நாட்களாக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.. காற்றாலை மின் உற்பத்தியை மன்னார் நகருக்குள் கொண்டு வர வேண்டாம் என்ற போராட்டத்தை வெறும்கோசமாக நீங்கள் கருதிவிடக்கூடாது. அது உணர்வு 6

# அமைச்சர் சந்திரசேகரன் மீது சரமாரியான குற்றச்சாட்டு

## அருச்சுனா எம்.பி. விளாசல்

கடற்றொழில் அமைச்சில் இடம்பெறும் ஊழல் மோசடியை ஆதார பூர்வமாக நிரூபித்தால் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் பதவியை துறப்பாரா எனக் கேள்வி எழுப்பிய யாழ். மாவட்ட சுயேச்சைக் குழு நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை சுட்டிக்காட்டி கடற்றொழில் அமைச்சு தொடர்பில் பல கேள்விகளை அமைச்சரிடம் முன்வைத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ் கேள்விகளை முன்வைத்து இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சந்திரசேகரன் கடற்றொழில் அமைச்சராகப் பதவி வகிப்பது மகிழ்ச்சிக்குரியது. கடற்றொழில் அமைச்சில் இடம்பெறும் மோசடிகள் தொடர்பில் பொதுமக்கள் பலமுறைப்பாடுகளை முன்வைக்கிறார்கள். இருப்பினும் இந்த முறைப்பாடுகள் குறித்து ஆளும்தரப்பு இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காமல் 2

# கட்டார் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்கு ஐதேக கண்டனம்

இஸ்ரேலால் கட்டார் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை வன்மையாகக் கண்டிப்பதாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது ஐக்கிய தேசிய கட்சி.

அந்தஅறிக்கையில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 2023 ஒக்டோபர் 7 அன்று ஹமாஸ் இஸ்ரேலைத் தாக்கியபோது, ஐக்கிய தேசியப் கட்சி உடனடியாகஅத்தாக்குதலைக்கண்டித்ததோடு, அனைத்து இஸ்ரேலிய பணயக் கைதிகளையும் விடுவிக்குமாறு கோரியது. காஸா போர் தொடர்ந்தபோது, பாலஸ்தீனிய மக்களின் துன்பங்கள் அதிகரித்த நிலையில், ஐக்கிய தேசியப்கட்சி இஸ்ரேலின் நடவடிக்கைகளைக் கண்டித்து, உடனடியாகப் போரை நிறுத்துமாறு வலியுறுத்தியது.

இந்நிலையில்நேற்றுமுன்தினம்இஸ்ரேலால் கட்டார் மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஒரு இறைமையுள்ளநாட்டின்மீதானதாக்குதலாகும். அது தீய எண்ணத்துடன் நடத்தப்பட்டுள்ளது. ஹமாஸுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான தற்போதையபேச்சுக்களில்கட்டார்தொடர்ச்சியாக ஒரு முக்கியப் பங்கை வகித்து வருகிறது.

அமைதிப் பேச்சுக்கு ஏற்பாட்டாளராகத் திகழும் ஒரு நாட்டின் மீது தாக்குதல் நடத்துவது, போர் நிறுத்தத்திற்கான மேலதிகப் பேச்சு முயற்சிகள் ஒரு சாத்தியமற்ற விடயமாகத் தோன்றுகிறது என்பதை 2

# கர்ப்பிணிகளுக்கு இனிமேல் ரூ. 5000க்கு உணவுப் பொதி

நாட்டிலுள்ள ஒரு இலட்சத்து 60 ஆயிரத்து இருநூறுகர்ப்பிணித்தாய்மார்களுக்கு 5,000 ரூபா பெறுமதியான உணவுப் பொதிகளை வழங்குவதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்காக ஆளும்தரப்பு 1500 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் இந்த திட்டம் நடைமுறைக்கு வரும் எனவும் சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல் ராஜ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற தேசிய கணக்காய்வு (திருத்தச்)சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகெ ண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர்மேலும்தெரிவித்ததாவது:

மேற்படி திட்டத்திற்காக நாம் 1500 மில்லியன்ரூபாவைஒதுக்கீடுசெய்வதற்கான முக்கியகாரணம்கடந்தஏப்ரல்மாதத்தில் 2

# இலங்கையும் கவலை தெரிவிப்பு

கட்டாரில் இஸ்ரேலினால் மேற்கொள்ளப்பட்டுள்ள தாக்குதல்கள் குறித்து இலங்கை கவலை வெளியிட்டுள்ளது. அயலுறவுத்துறை அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டு இவ்வாறு கவலை தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

கட்டாரில் சமநிலையற்ற தன்மையை மேலும் அதிகரிக்கவும், பிராந்திய பாதுகாப்பை குறைமதிப்பிற்கு உட்படுத்தவும் வழிவகுக்கும், சமீபத்திய தாக்குதல்கள் குறித்து, இலங்கை ஆழ்ந்த கவலை தெரிவிக்கிறது.

உலகளாவிய ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச விதிமுறைகள் மற்றும் சட்டங்களை நிலைநிறுத்தி, பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை நோக்கி இராஜதந்திர உரையாடலில் ஈடுபடுவதிலும், நிதானத்தைக் கடைப்பிடிப்பதிலும், அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியதன் அவசியத்தை இலங்கை வலியுறுத்துகிறது.

காலைக்கதிர் Kalaikkathir

# சந்திரிகா, மகிந்த, மைத்திரி மூவரும் நேற்று வெளியேற்றம்

அரசுத் தலைவர்களுக்குரிய சிறப்புரிமைகளை நீகுவதற்கான சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் இதுவரை காலமும் உத்தியோகபூர்வ இல்லங்களில் வசித்து வந்த முன்னாள் அரசுத் தலைவர்கள் அவற்றிலிருந்து வெளியேறி தத்தமது சொந்த இல்லங்களில் குடியேறியுள்ளனர். அந்த வகையில் நேற்று வியாழக்கிழமை முன்னாள் அரசுத் தலைவர்களான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ச மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் இவ்வாறு உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து வெளியேறினர்.

கொழும்பு விஜேராம மாவத்தையிலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ச வெளியேறிய போது, ஆதரவாளர்கள் அங்கு கூடி குரலெலுப்பினர். அத்தோடு அவர் அங்கிருந்து வெளியேற முன்னாள் முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பௌத்த மதத்தலைவர்கள் உள்ளிட்ட பலரும் அங்கு வருதை தந்து அவரை சந்தித்திருந்தனர். சில இராஜதந்திரிகளும் முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்தவை அவர் புறப்படுவதற்கு முன்பாகச் சந்தித்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு விஜேராம இல்லத்திலிருந்து வெளியேறிய மஹிந்த ராஜபக்ச தங்காலையிலுள்ள கால்டன் இல்லத்துக்குச் சென்றார். அங்கு அவரை வரவேற்பதற்குரிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. அவர் வெளியேறியபோது ஊடகங்கள் ஆளும்தரப்பின் இந்த நடவடிக்கை குறித்து அவரிடம் கேள்வியெழுப்பின. எனினும் அவர் பதிலெதுவும் கூறவில்லை. பின்னர் ஊடகவியலாளர் ஒருவர் ஆளும்தரப்பின் இந்த தீர்மானம் நியாயமானது எனக் கருதுகின்றீர்களா எனக் கேட்டபோது, 'அது ஆளும்தரப்புக்கு நியாயமானது. எமக்கு இல்லை' என்று கூறினார்.

இதேவேளை முன்னாள் அரசுத்தலைவர் மஹிந்தவின் பாரியாரிடமும் ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பினர். அவற்றுக்குப் பதிலளித்த அவர், 'நான் எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசியல் பேசுவதில்லை' என்றார். அவ்வாறெனில் இங்கிருந்து கவலையுடனா வெளியேறுகின்றீர்கள் எனக் கேட்ட போது, 'இல்லை. இல்லை. மகிழ்ச்சியுடனேயே செல்கின்றோம்' எனக் கூறினார்.

முன்னாள் அரசுத் தலைவர்களுக்குரிய சிறப்புரிமைகள் நீக்கப்படும் என தேசிய மக்கள் சக்தி தொடக்கத்திலிருந்தே கூறி வந்தது. எனவே அவர்கள் அரச இல்லங்களிலிருந்து வெளியேறவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டு வந்தது. இது நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில், தனக்கு இது தொடர்பில் சட்டபூர்வ அறிவித்தல் வரும் வரை விஜேராம இல்லத்திலிருந்து வெளிறேப் போவதில்லை என மஹிந்த ராஜபக்ச தரப்பு குறிப்பிட்டிருந்து. இந்நிலையிலேயே குறித்த சட்டம் நிறைவேற்றப்பட்டது.

அரச இல்லங்கள் தேவைக்கேற்ப ஒப்படைக்கப்படாவிட்டால், இணக்கத்தைக் கோரி எழுத்துப்பூர்வ அறிவிப்பு வழங்கப்படும் என்று பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது. புதிய சட்டத்தின் விதிகளுக்கு இணங்க எதிர்காலத்தில் அதற்கான நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## இனி இது .....

ஆனால் மகிந்த மட்டுத்தான் ஆதரவாரமாக வெளியேறினார். தனக்கு இன்னும் மக்கள் மத்தியில் ஆதரவு இருக்கிறது என்று காட்டும் வகையில்தான் அவரது வெளியேற்றம் இடம்பெற்றது. இதுபோன்றுதான் அவர் பிரதமர் பதவியிலிருந்து இறங்கியபோதும் மக்கள் ஆதரவு இருப்பதாகக் காட்ட முற்பட்டு, 'அரகலய' போராட்டக் குழுவினர் மீது அவரது ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தி பின்னர் அது பெரும் வன்முறைகளுக்கு வித்திட்டது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். இந்தத் தடவை அச்சம் காரணமாகவோ என்னவோ அவரது ஆதரவாளர்கள் எந்த வன்முறையிலும் அடாவடித்தனங்களிலும் ஈடுபடவில்லை.

கொ-ழும்பில் இருந்து புறப்பட்ட மகிந்த நேராக அம்பாந்தோட்டை மாவட்டம் தங்காலையில் உள்ள தனது சொந்த இடமான கால்டன் இல்லத்திற்குப் போனார். அங்கு மஹிந்தவை அவரது ஆதரவாளர்கள் பெருமளவில் கூடி வரவேற்றார்கள். அதுதான் அவரது சொந்த மாவட்டம். அங்கிருந்துதான் அவர் அரசியலில் இறங்கினார். அவரது தந்தையார் ராஜபக்சவின் அரசியல் களமாக இருந்ததும் அந்தப் பகுதிதான். கொழும்பிலிருந்து அடித்துத் துரத்தப்பட்டால் உடனே ஓடிப்போய் மகிந்த பதுங்கும் இடம் தங்காலைதான். சொந்த மக்களிடம் ஓடி வந்துவிடுவதான ஒரு பிம்பத்தை ஏற்படுத்தி மக்களின் அனுதாபத்தை தேடுவதை அவர் ஒரு உத்தியாகவே கொண்டுள்ளார். 2015இல் ரணில் - மைத்திரி கூட்டணியால் தோற்கடிக்கப்பட்டபோதும்அவர்இதையேதான் செய்தார். தங்காலைக்குப் போய்ச்சேர்ந்ததும் தமிழர்களால் தான் தோற்கடிக்கப்பட்டார் என்று இனவாதத்தை விதைத்து தனது அரசியல் எதிர்காலத்திற்கு மீண்டும் விதை ஊன்றினார்.

இப்போதும் கொழும்பில் இருந்து புறப்பட்டதும் அவர் தங்காலைக்குத்தான் சென்று சேர்ந்தார். ஆனால் அவர் அங்கு வசிக்கப்போவதில்லை. மீண்டும்கொழும்புக்கு வந்து தனது பிள்ளைகளுக்கான அரசியல் எதிர்காலத்திற்குதேவையானநடவடிக்கைகளில் ஈடுபடுவதுதான் அவரது திட்டம். அதற்காகத் தனக்கு கொழும்பில் பொருத்தமான வீட்டைத் தேடச் சொல்லி அவர் ஏற்கனவே தனக்கு நெருக்கமானவர்களுக்குத் தெரிவித்துள்ளார். அவரது மூன்று பிள்ளைகளும் கொழும்பில்தான் இருக்கின்றனர். ஆனால், அவர்களுடன் மகிந்த வசிக்கமாட்டார் என்று சொல்லப்படுகின்றது. தன்னைத் தொடர்ந்தும் அரசியல் தலைவராக வைத்துக்கொள்ளும் வகையில் வீட்டிலிருந்தபடியே அரசியலில் ஈடுபடத்தக்க வசதியான வீடு ஒன்றையே அவர் தேடி வருகின்றாராம்.

அவருக்கு கொழும்பில் வீடு வழங்க ஏற்கனவே 4 வீடுகளைத் தருவதற்கு ஆட்கள் தயாராக இருக்கின்றனர் என்றும் செய்தி. அதில் ஒருவர் தமிழர் என்றும் தகவல். அந்த 4 வீடுகளில் ஒன்றைப் பார் வையிட வருமாறு மஹிந்த ராஜபக்சவுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டபோதும் அவர் அங்கு சென்று பார்வையிடவில்லை என்று முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன கூறினார்.

மஹிந்த ராஜபக்சவுக்கு வீடு வழங்க முன்வந்தோரில் தமிழர் ஒருவரும் அடங்குகின்றார் என்றும் லக்ஷமன் யாப்பா அபேவர்தன குறிப்பிட்டார். மஹிந்த ராஜபக்ச கொழும்புக்குத் திரும்புவது குறித்து எதனையும் தெரி விக்கவில்லை என்றும், அவர் தங்காலையில் அமைந்துள்ள தனது இல்லத்தில்சிறிதுகாலம்தங்குவதற்குவிருப்பம் தெரிவித்துள்ளார்என்றும்,தேவைப்படும்போது கொழும்புக்குத்திரும்புவார்என்றும்லக்ஷமன் யாப்பா அபேவர்தன மேலும் தெரிவித்தார்.

மகிந்தவின் இந்த தங்காலைக்கு ஓடி அரசியலுக்குத் திரும்பும் உத்தி தொடர்ந்தும் பயனளிக்கும் என்பது இந்தமுறை கேள்விக்குறிதான் என்கிறார்கள் கொழும்பிலுள்ள அரசியல் அவதானிகள். அவர் என்னதான் முயற்சி செய்தாலும் இழந்த செல்வாக்கை அவரது காலத்திற்குள் மீளப்பெறுவது முடியாது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். பார்க்கலாம் என்ன நடக்கிறது என்று..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வெளியக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

அங்குஅவர்மேலும்உரையாற்றியதாவது,

முழு மன்னார் மாவட்டத்துக்குமான திண்மக் கழிவகற்றல் நிகழ்ச்சி திட்டத்துக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் 69 மில்லியன் ரூபாவும்,மன்னார் நகர சபை ஊடாக 8 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டு 2012-2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு 2015 ஆம் ஆண்டு திண்மக் கழிவகற்றல் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால் தற்போது பொது நிறுவனத்தின் ஊடாக இந்த கழிவகற்றல் திட்டத்துக்கு தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில்வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதனால் மன்னார் மாவட்ட திண்மக் கழிவகற்றல் பாதிக்கப்பட்டுள்ளது.இவ்விடயம் தொடர்பில் அடுத்த அமர்வில் சகல ஆவணங்களையும் சபைக்கு சமர்ப்பிக்கிறேன்.

இலங்கையில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், பெண் தலைமைத்துவ குடும்பங்களின் சவால்கள் தொடர்பில் அமைச்சர் சரோஜா பல விடயங்களை குறிப்பிட்டிருந்தார்.2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் வடக்கு மற்றும் கிழக்குமாகாணங்களில்பெண்தலைமைத்துவ குடும்பங்கள் அதிகளவில் தோற்றம் பெற்றன.பெண் தலைமைத்துவ குடும்பங்கள் சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்பில் பல சவால்களை எதிர்கொள்கின்றன.

நாட்டில் பேசாக்கின்மை குறைப்பாட்டில் வடக்கு மாகாணம் முன்னிலையில் உள்ளது. இந்த பிரச்சினைக்கு முறையான திட்டங்கள் ஏதும் செயற்படுத்தப்படவில்லை. கர்ப்பிணி தாய்மார்களுக்கு போசாக்கு உணவுகளும், திரிபோசாவும் முறையாக கிடைக்கப்பெறுவதில்லை.

யுத்தத்தின் போது இராணுவத்திடம் சரணடைந்த பெண்களுக்கு என்னநேர்ந்தது என்பது இதுவரையில் தெரியவில்லை. வடக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் தன்னுடைய கணவரை இராணுவத்திடம் ஒப்படைத்திருந்தார்.இவர் இதுவரையில் மீள ஒப்படைக்கப்படவில்லை. காணாமல் போனோர் பட்டியலிலேயே அவர் இன்றும் உள்ளார். வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் இன்றும் போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள்.

வெளியகவிசாரணைகளுக்குதயாரில்லை என்று ஆளும்தரப்பு சர்வதேச அரங்கில் குறிப்பிட்டுள்ளது. முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்சவின் ஆட்சியில் முதல் முறையாகநல்லிணக்கஆணைக்குழுஒன்று நியமிக்கப்பட்டது.அந்தகுழுவின்பரிந்துரைகள் கூட நிறைவேற்றப்படவில்லை.அதன் பின்னர் அரசுத் தலைவர் விசாரணை ஆணைக்குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது. அந்த ஆணைக்குழுவின் அறிக்கை யின் பரிந்துரைகளும் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

பிற்பட்ட காலங்களில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள்,விசாரணைக்குழுக்கள் முறையாக செயற்படவில்லை. சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனால் தான் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட எம்மக்கள் வெளியக விசாரணைகளை கோருகிறார்கள். வெளியக விசாரணை நீதிக்கானதாக அமைய வேண்டும்.

பல்லாயிரக்கான எமது சகோதர பெண்கள் இன்றும் குங்குமத்துடனும், தாலியுடனும் தனது கணவர் வருவார் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். இது எமது வரலாற்றில் துயரமிக்கவிடயம். சிந்தித்துபாருங்கள் இதற்கு என்ன நீதி கிடைக்கப்போகிறது. பட்டலந்த விவகாரம் தொடர்பில் அவதானம் செலுத்தும் நீங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் உறவுகளுக்காகவும், நீதிக்காகவும் காத்துக் கொண்டிருக்கும் உள்ளங்கள் தொடர்பில் கவனம் செலுத்துங்கள்.

டக்ளஸ் தேவானந்தாவுடன் 18 ஆண்டுகாலமாக ஒன்றாக இருந்த சதா எனும் சுப்பையா பொன்னையா என்பவர் 2025.09.09 ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் ஊடக மையத்தில் ஊடக சந்திப்பொன்றை நடத்தி 'நிமலராஜன்,அற்புதன் மற்றும் நெடுந்தீவில் தற்காலிக உதவி அரசாங்க அதிபராக பதவி வகித்த நிக்கிலாஸ் என்பவரை ஈ.பி.டி.பி தான் படுகொலை செய்வது என்று வெளிப்படையாக குறிப்பிட்டுள்ளார்'.

அத்துடன் ஈ.பி.டி.பி தான் பல கொலைகளை செய்ததாகவும் சதா என்பவர் குறிப்பிட்டுள்ளார்.இதற்கான விசாரணைகள் இடம்பெறுமா, நிமலராஜனின் கொலை முறையாக விசாரிக்கப்படவில்லை என்று சர்வதேச நிறுவனங்கள் குறிப்பிடுகின்றன. உண்மைகள் மூடி மறைக்கப்பட்டன.

இசைபிரியாஇலங்கைஇராணுவத்தால்மிக மோசமாககொலைசெய்யப்பட்டார்.இதேபோல் பல பெண்கள் கொலை செய்யப்பட்டார்கள். நீங்கள் இராணுவத்தை பாதுகாக்கவே முயற்சிக்கின்றீர்கள். இலங்கை நீதியின் வழியில் செயற்பட்டிருந்தால் ஏன் வெளியக விசாரணைக்கு தயாராக கூடாது. வெளியக பொறிமுறைக்குள் வராவின் இந்த நாட்டில் நீதி:,சமாதானம் மற்றும் நல்லிணக்கம் எப்போது உறுதிப்படுத்தப்படாது. என்பதை தெளிவாக குறிப்பிட்டுக் கொள்கிறேன் என்றார்

## கட்டார் மீது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்படுத்துகிறது.

ஐக்கிய தேசிய கட்சி மீண்டும் ஒருமுறை, காஸாவில் நடைபெற்று வரும் அனைத்துத் தாக்குதல்களும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும், ஹமாஸ் எஞ்சியுள்ள இஸ்ரேலிய பணயக்கைதிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் தனது நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறது.

## அமைச்சர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பது கவலைக்குரியது.

முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்க ளுக்கான பதிலை இந்த உயரிய சபையில் ஆதாரபூர்வமாக முன்வைக்க முடியுமா? இல்லையென்றால் ஏன்?

இலங்கையில் உள்ள நீரியல் வளங்கள் தொடர்பான சட்டங்களில் கரைவலை மற்றும் சுருக்கு வலைகள் பயன்பாடு தடை செய்யப்பட்டுள்ளது. தாங்கள் கடற்றொழில் அமைச்சராக பதவியேற்றதன் பின்னர் இவ்விரு சட்டவிரோத செயற்பாடுகள் குறித்து எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்பது பொதுமக்களின் முறைப்பாடு.

இந்த சட்டவிரோத செயற்பாடு தொடர்பில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடற்றொழில் அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகள் எத்தனை? இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளினால் மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

கிடைக்கப்பெற்றமுறைப்பாடுகள்தொடர்பில் எந்தவொரு மீனவ சங்கங்களுடனும் கலந்துரையாடி உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டும் தங்களின் மீது சுமத்தப்பட்டுள்ளது. மீனவ சங்கங்களுடன் மேற்கொண்ட பேச்சுக்கள் எத்தனை?அந்தப்பேச்சுக்களினால்எடுக்கப்பட்ட தீர்மானங்கள் என்னவென்பதையும் இந்தச் சபைக்கு அறிவிக்க முடியுமா?

கரையோர பிரதேசங்களில் கடலட்டைப் பண்ணைகளுக்கு அனுமதி வழங்குவது கடற்றொழில் அமைச்சின் பிரதான பொறுப்பாகும். இதுவரையில் இதனை நியாயமான முறையில்தாங்கள்மேற்பார்வை செய்யவில்லை என்பது பொதுமக்களின் முறைப்பாடு. அமைச்சில் கையூட்டல் பெறப்படுகிறது என்பதும் பொதுமக்களின் முறைப்பாடு.தங்களின்பினாமிகளினால்இந்த கையூட்டல்பெறப்படுவதாககுறிப்பிடப்படுகிறது. அதற்குரிய ஆதாரங்களை நான் சபைக்கு சமர்ப்பித்தால் அதனை ஏற்றுக்கொண்டு தங்களால் நடவடிக்கை எடுக்க முடியுமா?

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மீன்பிடி இயக்குநரை தாங்கள் இடமாற்றம் செய்துள்ளீர்கள் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. தாங்கள் அமைச்சராகப் பதவியேற்றதன் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடற்றொழில் அமைச்சின் பதவிகளில் இடம்பெற்ற மாற்றங்கள் என்னென்ன? முறையான நேர்காணல் இடம்பெற்றதா? முறையான வழிமுறைகள் பின்பற்றதா?

உங்களின் அமைச்சில் மோசடி இடம்பெறுவதை சுட்டிக்காட்டி சமூக வலைத்தளங்களில் காணொளி ஒன்று வெளியாகியுள்ளது. அந்த காணொளியை நான் சபைக்கு சமர்ப்பித்து குற்றச்சாட்டை நிரூபிக்கிறேன். அதனை ஏற்றுக்கொண்டு அமைச்சு பதவியிலிருந்து விலக முடியுமா, மயிலிட்டி மற்றும் குறிகாட்டுவான் பகுதியில் கடற்றொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகள் என்ன? அவற்றில்விவரத்தைச்சபையில்முன்வைக்க முடியுமா என கேள்வியெழுப்பினார்.

இந்தகேள்விகளுக்குப்பதிலளிக்கஇரண்டு வாரங்கள் காலவகாசம் கோருகிறேன் என்றார் அமைச்சர் சந்திரசேகரன்.

## கர்ப்பிணிகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புத்தாண்டுகாலத்தில்மக்களுக்குவழங்கப்படும் அஸ்வெசும மூலம் நிவாரணம் பெறும் பயனாளிகளுக்கு போசாக்கான உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.

என்றாலும் அப்போது உள்ளூராட்சி

தொடர்ச்சி 6ம் பக்கம்....

# முள்ளிக்குளம் மக்களை விரைவில் மீளக்குடியேற்ற நடவடிக்கை தேவை

## நாடாளுமன்றத்தில் ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

முள்ளிக்குளம் கிராம மக்கள் அகதி வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்க கடற்படையினரும் வனவளத் திணைக்களத்தினரும் இணைந்து முள்ளிக்குளம் கிராமத்தை முற்றாக அபகரித்துவைத்துள்ளனர். தாம் வாழ்ந்த நிலங்கள் அனைத்தும் கண்முன்னே ஆக்கிரமிக்கப்பட்டு இருக்க தமது நிலத்தில் மீள்குடியேற முடியாத நிலையில் உள்ள முள்ளிக்குளம் கிராம மக்களின் அகதி என்னும் அவல வாழ்வுக்கு முடிவு கட்டப்பட வேண்டும். அந்த மக்கள் உடன் மீள்குடியமர்த்தப்பட வேண்டும். முள்ளிக்குளம் மக்களை மீள் குடியமர்த்துவதற்கு உரிய நடவடிக்கை விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டுமென இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற தேசிய கணக்காய்வு (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முள்ளிக்குளம் கிராமத்தில் வாழ்ந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு நிலவிய அசாதரண நிலைமை காரணமாக தங்களுடைய பூர்வீக வாழ்விடத்தை விட்டு இடம்பெயர்ந்தனர். சுமார் 400 தமிழ்க் குடும்பங்களே இவ்வாறான இடப்பெயர்வை சந்தித்தனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்த மக்கள் ஒரு தசாப்த காலத்துக்கு பின்னர் 2002ஆம் ஆண்டு அவர்களுடைய சொந்தஇடமானமுள்ளிக்குளத்தில்மீள்குடியேற்றப்பட்டனர். இவ்வாறுதமதுசொந்தஇடத்தில்மீள்குடியேறியமக்களுக்கு அக்காலப்பகுதியில் 150 நிரந்தர வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மொத்தமாக 300க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேறி வாழத் ஆரம்பித்தனர். அது நீடிக்கவில்லை. மீள்குடியேறி வெறுமனே ஐந்து வருடங்களிலேயே 2007ஆம் ஆண்டு மீளவும் இடம்பெயர வேண்டிய அவலநிலைக்கு முள்ளிக்குளம் கிராம மக்கள் தள்ளப்பட்டனர். இவ்வாறான சூழ்நிலையில் போர் மௌனிக்கப்பட்டு 16 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் முள்ளிக்குளம் மக்கள் தமது பூர்வீக வாழ்விடத்தை விட்டு இடம்பெயர்ந்து இரண்டு தசாப்த காலங்களை அண்மித்துள்ள நிலையில் இதுவரை முள்ளிக்குளம் கிராம மக்களை அவர்களுடைய சொந்த இடத்தில் மீள்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அத்ததகைய சூழலில் முள்ளிக்குளம் கிராம மக்கள் அயல் கிராமங்களான மலைக்காடு மற்றும் காயாக்குழி உள்ளிட்ட கிராமங்களில் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

குறிப்பாக மலைக்காடு, காயாக்குழி ஆகிய கிராமங்களில் 250 இற்கும் மேற்பட்ட முள்ளிக்குளம் மக்கள் அகதி என்னும் அவல வாழ்வை வாழ்கின்றனர். இது தவிர 175 வரையான குடும்பங்கள் இந்தியாவின் அகதி முகாம்களில் வாழ்வதாகவும் மேலும் பல குடும்பங்கள் ஆங்காங்கே சிதறி வாழ்வதாகவும் முள்ளிக்குளம் கிராமமக்கள் முறையிடுகின்றனர்.

இவ்வாறாக முள்ளிக்குளம் கிராமமக்கள் அகதி வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்க கடற்படையினரும் வனவளத்திணைக்களத்தினரும்இணைந்துமுள்ளிக்குளம் கிராமத்தை முற்றாக அபகரித்துவைத்துள்ள நிலையைக் காணக்கூடியதாகவுள்ளது.

குறிப்பாக முள்ளிக்குளம் கிராமத்தைச்சேர்ந்த தமிழ் மக்களுக்குரிய நெற் செய்கைக்குரியகாணிகள், தோட்டக்காணிகள், குடியிருப்புக்காணிகள், நீர்ப்பாசனக்குளங்கள் உள்ளடங்கலாக 1500க்கும் அதிகமான ஏக்கர்கள் வனவளத்திணைக்களத்தாலும் கடற்படையாலும், ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசனக்குளங்களைப்பொறுத்தவரையில்சின்னத் தனக்கன் குளம், பெரியதனக்கன்குளம்,பரவெளிக்குளம், பாலடிக்குளம்,செட்டியார்குளம், அரக்குளம், புதுக்குளம் உள்ளிட்டவைமுற்றாகஆக்கிரமிக்கப்பட்டநிலையிலேயே காணப்படுகின்றன.அதேவேளை தமிழ் மக்களுடைய காணிகள் கடற்படையினரால் அபகரிக்கப்பட்டு தோட்டப் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தமிழ் மக்களுக்கு 2002ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின்போது அமைக்கப்பட்டு வழங்கப்பட்ட வீடுகளில் கடற்படையினரது குடும்பங்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். முள்ளிக்குளம் மக்கள் கடற்றொழிலில் ஈடுபட்டு வந்த இடங்களும் முற்றாக அபகரிக்கப்பட்டுள்ளன .

இத்தகைய சூழலில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தங்களுடைய பூர்வீகக் கிராமத்தை விடுவிப்புச் செய்வதுடன் தம்மை மீள்குடியமர்த்துமாறும் முள்ளிக்குளம் கிராம மக்கள் தொடர்ச்சியாக கோரிவருகின்றனர்.

குறிப்பாக தம்மை மீள் குடியமர்த்துமாறும் முள்ளிக்குளம் கிராம மக்கள் பல்வேறு போராட்டங்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

அந்தவகையில் கடந்த 2017 ஆண்டு காலப்பகுதியில் இரண்டுமாத காலம் தொடர்ச்சியாக மேற்கொண்ட தொடர் போராட்டத்தின் பலனாக அப்போதைய ஆளுநர் வருகை தந்து காணிகள் விடுவிப்புச் செய்வதாக உத்தரவாதமளிக்கப்பட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர். அதன் பின்னர் 77 ஏக்கர் காணிகளை விடுவிப்புச்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு காணிகளும் மக்களால் துப்புரவாக்கப்பட்டுள்ளன.

அதேபோல் மக்களால் துப்புரவு செய்யப்பட்ட பகுதிகளை தீயிட்டு கொளுத்துவதற்கு கடற்படையினர் இடையூறு ஏற்படுத்தியதையடுத்து அந்தக் காணிகள் துப்புரவு செய்வதும் கைவிடப்பட்டது. இதனால் தமிழ் மக்கள் அந்தக் காணிகளில் மீள்குடியேறுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளும் தோல்வியிலேயே முடிவடைந்தன.இவ்வாறாக முள்ளிக்குளம் கிராமத்தில் மக்கள் எவரும் மீள்குடியமர்த்தப்படாத நிலையிலும் அங்கு பாடசாலை இயங்கி வருகின்றது. அங்குள்ள தேவாலயத்திற்கும் மக்கள் சென்று வருகின்றனர்.

முள்ளிக்குளம் பகுதியில் இயங்கிவருகின்ற முள்ளிக்குளம் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் 42 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். மலைக்காட்டுப் பகுதியில் வசிக்கின்ற முள்ளிக்குளத்தை சேர்ந்தவர்களுடைய பிள்ளைகளே முள்ளிக்குளம் பாடசாலைக்கு காலையில் சென்று மாலையில் திரும்புகின்றனர். அதே போல் முள்ளிக்குளம் பகுதியில் அமைந்துள்ள பரலோகமாதா தேவாலயத்துக்கும் மக்கள் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறாக தமது சொந்த இடத்துக்கு சுற்றுலாப் பயணிகளைப் போல சென்று வருகின்ற அவலத்தை சுமந்து அகதி வாழ்க்கையை முள்ளிக்குளம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

தாம் வாழ்ந்த, பயிர்செய்த நிலங்கள் அனைத்தும் கண்முன்னே ஆக்கிரமிக்கப்பட்டு இருக்க தமது நிலத்தில் மீள்குடியேற முடியாத நிலையில் உள்ள முள்ளிக்குளம் கிராம மக்களின் அகதி என்னும் அவல வாழ்வுக்கு முடிவு கட்டப்படவேண்டும். அந்த மக்கள் உடன் மீள்குடியமர்த்தப்பட வேண்டும். முள்ளிக்குளம் மக்களை மீள் குடியமர்த்துவதற்கு உரிய நடவடிக்கை விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வெளிச்சத்துக்கு வரும் உண்மைகள்

**ஒரு இராணுவ அதிகாரி, குற்றக் குழுவொன்றுக்கு குண்டுகள், துப்பாக்கிரவைகள்விற்ற குற்றச்சாட்டில்கைதாகியிருக்கிறார். மேற்குக் மாகாண வடக்குப் பிராந்தியக் காவல் குற்றப்பிரிவு மேற்கொண்ட விசாரணையில், ஒரு இராணுவ முகாமின் தளபதியாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த லெப்டினன்ட் கேர்ணல் ஒருவர் 260 குண்டுகளை 6.5 லட்சம் ரூபாய்க்கு விற்றார் என்று கூறப்படுகிறது. வாங்கியவர் 'கமாண்டோ சலிந்த' என்று அழைக்கப்படும் குற்ற உலகத் தலைவர்.**

**இச்சம்பவம் தனித்தனியே பார்க்கப்படும் ஒன்று அல்ல. மாறாக கடந்தபலஆண்டுகளாகவேகாவல்துறையினரும்இராணுவத்தினரும், செயற்பாட்டிலும் ஓய்விலும் இருப்போர்கூட, குற்ற உலகத்தோடு தொடர்புபட்ட நிகழ்வுகள் வெளிப்பட்டு வருகின்றன. எண்ணிக்கைச் சிறியதாக இருந்தாலும் இத்தகைய சிலர், நாட்டை பாதுகாத்து பெரும் பலிகளைச் செய்த ஆயுதப் படைகளின் கௌரவத்தைச் சீரழிக்கக் கூடிய அளவுக்கு பேராபத்தாக உள்ளனர்.**

**இலங்கையில் ஆயுத வன்முறை கடந்த சில ஆண்டுகளாகக் கட்டுக்கட்டாக அதிகரித்துவருவது யாரும் மறுக்க முடியாத உண்மை. குற்றக் குழுக்களுக்குள் நிகழும் துப்பாக்கிச் சூடு, வெளிப்படையான கொலைச் சம்பவங்கள், ஆட்கொலைக்கு ஆயுதங்கள் வாடகைக்கு விடப்படும்சந்தைகள்—இவைஅனைத்தும்நாட்டின்சட்டமும்பாதுகாப்பும் எவ்வாறு தளர்ந்திருக்கின்றன என்பதை வெளிப்படுத்துகின்றன.**

**இலங்கையில் தனிப்பட்ட நபர்களின் சட்டபூர்வமான ஆயுதக் கட்டுப்பாடு உலகின் பல நாடுகளைக் காட்டிலும் கடுமையாகவே உள்ளது. இருந்தபோதிலும் சட்டவிரோதமாகக் கிடைக்கும் துப்பாக்கிகளின் எண்ணிக்கை ஏன் அதிகம்? இதன் அடிப்படைச் சூத்திரம் கடந்த காலத்தை நோக்கிச் செல்கிறது. இடதுசாரி கிளர்ச்சிகளிலிருந்து துவங்கி முப்பது வருட உள்நாட்டுப் போர் வரை, ஆயுதங்கள் பெருமளவில் நாட்டுக்குள் புகுந்தன. போரின் போது கைப்பற்றப்பட்ட எல்.டி.டி.இ. ஆயுதங்களின் சரியான ஆவணப்படுத்தலும் பாதுகாப்பும் நடந்திருக்கவில்லை. சிலர் போர் 'வெற்றி அடையாளங்கள்' என்று அழைத்துச் சென்ற ஆயுதங்கள் கருங்கடைக்குள் சென்றன. அரசியல் கட்சிகளுக்கும், அவர்களின் துணை அமைப்புகளுக்கும் வழங்கப்பட்ட ஆயுதங்கள் பலவும் இன்னமும் களஞ்சியங்களில் சரியாகப் பதிவு செய்யப்படாமல் கிடக்கின்றன.**

**2023ஆம் ஆண்டில் வெளியான ஒரு பத்திரிகைச் செய்தி, எல்.டி.டி.இ.யிடமிருந்து கைப்பற்றப்பட்ட சிறு ஆயுதங்கள் சரியாகக் கணக்கெடுப்பில்சேர்க்கப்படாதது குறித்துப் பாதுகாப்புத் துறையினரே அச்சத்தை வெளியிட்டிருந்தனர். தொடர்ச்சியான ஆயுதச் சோர்வுகள், குற்றக் குழுக்களின் கைகளுக்குள் இலகுவாகச் சென்றடைய வழிவகுத்துள்ளன. சீரியல் எண்கள் அழிக்கப்பட்டதால் விசாரணைகளிலும் தடைகள் ஏற்பட்டுவருகின்றன. இதனோடு, ஹெரோயின், மெத்தாம்பேட்டமைன் போன்ற போதைப் பொருள் கடத்தல்களோடு சிறு ஆயுதங்களும் இணைக்கப்பட்டு வருவதாக தகவல்கள் உள்ளன.**

**இந்தச்சூழலில், இராணுவஅதிகாரிகள்நேரடியாககுற்றஉலகுக்குக் குண்டுகள் விற்பனை செய்வது நாடு முழுவதும் பாதுகாப்புக்கு ஏற்படும் ஆபத்தை மிகத் தெளிவாகக் காட்டுகிறது. கடந்த மாதங்களில் மேற்கு மற்றும் தெற்கு மாகாணங்களில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடுகள் தொடர்ச்சியாக அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. குற்றக் குழுக்கள் அரச பாதுகாப்புப் படைகளிலிருந்து குண்டுகளை வாங்கக்கூடிய சூழல் உருவாகியிருப்பது பயங்கரச் சிந்தனையையே கிளப்புகிறது.**

**அரசாங்கம் சில மாதங்களுக்கு முன்பு பாதுகாப்புத் துறையின் பத்திரிகைச் சந்திப்பில், ஆயுதக் களஞ்சியங்களின் முழுமையான கணக்காய்வு நடைபெறுவதாக அறிவித்தது. ஆனால் அறிக்கை எப்போதுவெளிவரும்? எத்தகையநடவடிக்கைகள்எடுக்கப்படஉள்ளன? என்பதில் மக்கள் இன்னமும் தெளிவில்லாமல் இருக்கிறார்கள். காலம் செல்லச் செல்ல, ஆயுதங்கள் குற்ற உலகின் கைகளுக்குச் செல்லும் அபாயம் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.**

**ஆகவே, அரசாங்கம் இனி தாமதிக்கக் கூடாது. ஆயுதக் களஞ்சியங்களின் மேலாண்மையை நவீனப்படுத்த வேண்டும். கண்காணிப்பு முறைகள் தொழில்நுட்ப ரீதியாக வலுப்படுத்தப்பட வேண்டும். இராணுவத்தினராலும் காவல்துறையினராலும் மேற்கொள்ளப்படும் துரோகம், எத்தகைய பதவியிலிருந்தாலும் சட்டத்தின்முழுப்பொருத்தத்துடனும்கடுமையானதண்டனைகளுடனும் எதிர்கொள்ளப்பட வேண்டும்.**

**பாதுகாப்புஅமைப்புகள்மீது மக்களின் நம்பிக்கைதகர்ந்துவிட்டால், சமூகத்தின் ஒழுங்கே ஆபத்தில் ஆழ்த்தப்படும். இராணுவமும் காவல்துறையும் நாட்டைபாதுகாக்கும் சக்திகளாகத் தொடர்வதற்காக, இத்தகைய சிதைவு மற்றும் ஊழலை அடிக்கோடே அறுத்தெறிதல் அரசாங்கத்தின் முதல் கடமையாகும். ஆயுதச் சோர்வை நிறுத்துதல் என்பது இனி அரசியல் விருப்பமல்ல – தேசிய பாதுகாப்பின் அடிப்படைத் தேவையாகும்.**

# எம்.பிக்களின் நடத்தையை கட்டுப்படுத்த வழி தேவை

## பிரதமர் ஹரினி சபாநாயகரிடம் வலியுறுத்து

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசாத் சிறிவர்தன, நாடாளுமன்ற உறுப்பினர் லக்மாளி ஹேமச்சந்திரவுக்கு விடுத்த ஒழுக்கமற்ற அச்சுறுத்தலைக் கண்டிப்பதாகவும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒழுக்கமற்ற நடத்தைகளைக் கட்டுப்படுத்த ஒரு வழிமுறையை உருவாக்குமாறு சபாநாயகரிடம் கேட்டுக் கொள்வதாகவும் பிரதமர் ஹரிணி தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க் கட்சித் தலைவரின் ஊடகப் பேச்சாளர் எனத் தம்மைஅடையாளப்படுத்திக்கொள்ளும்ஒருநாடாளுமன்ற உறுப்பினர், லக்மாளி ஹேமச்சந்திரவை அச்சுறுத்தும் வகையில் பேசியிருக்கிறார். இதை வெறுமனே அந்த நாடாளுமன்ற உறுப்பினருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகக் கருத முடியாது. தெற்காசியாவில் மிகக் குறைந்த பெண் பிரதிநிதித்துவம் கொண்ட நாடாளுமன்றம் இதுவாகும். இவ்வாறான சூழ்நிலையிலும் ஒரு பெண் நாடாளுமன்ற உறுப்பினருக்கு அச்சுறுத்தல் விடுப்பதை நான் வன்முறையாகவும் துன்புறுத்தலாகவுமே பார்க்கிறேன். இந்த கலாசாரத்தை ஒழிப்பதற்கே நாம் முயற்சிசெய்கிறோம். இன்றுகாலையிலும்இந்தகுழுவினர் இதேபோன்றுதான் இங்கு நடந்து கொண்டார்கள்.

எனவே, எதிர்க்கட்சிநாடாளுமன்றஉறுப்பினர்களிடம், இந்த சம்பவம் குறித்து சமூக ஊடகங்களில் பரவும் விடயங்களைப் பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அதுவே இச்சம்பவம் தொடர்பான மக்களின் வெளிப்பாடாக இருக்கின்றது. மக்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைப் பற்றி ஆராய்ந்து பாருங்கள். இந்த சம்பவம் எவ்வளவு அருவருப்பானது என்பதை நீங்களே பாருங்கள். இந்த நாட்டு மக்கள் இதற்கு மேலும் இந்த முறையை விரும்பவில்லை.

நாம்கடுமையாகஉழைத்தே22பெண்நாடாளுமன்ற உறுப்பினர்களை இந்த நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்திருக்கிறோம். இன்று அந்தப் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள்இந்தநாட்டின்ஒட்டுமொத்தப்பெண்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்.

இந்த நாட்டில் பெண்களுக்கு எதிரான வன்முறை இவ்வாறான வாய்மொழி அச்சுறுத்தல்களாகவே ஆரம்பமாகின்றன. புதிய பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களின்திறமைகள் இந்தப்நாடாளுமன்றத்திற்கு ஒரு சவாலாக அமைந்திருக்கின்றது. இதுவே ஆண் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு சவாலாகவே அமைந்திருக்கிறது, இதுதான் இங்குள்ள பிரச்சனை. இந்த நாட்டின் பெண்கள் தொடர்ந்து எதிர்கொள்ளும் ஒரு பிரச்சனையாகும்.

இந்த நாட்டின் ஒட்டுமொத்தப் பெண்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றத்தில் பேசும்போது அவர்களை அச்சுறுத்துவது என்பது ஒட்டுமொத்தப் பெண்களுக்கும்விடுக்கப்படும்அச்சுறுத்தலாகும். மக்களின் கருத்தைப்புரிந்துகொண்டுஎதிர்க்கட்சிஉறுப்பினர்களாகிய நீங்களும் உங்களை மாற்றிக்கொள்ளுங்கள். பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகளை பார்த்துக் கொண்டிருக்கும் நாட்டின் இளம் சிறுமிகளும் 'ஒரு நாள் நானும் அவர்களைப் போல் வரவேண்டும்' என்று கனவு காண்கிறார்கள். அந்த கனவுகளையே நீங்கள் சிதைக்கிறீர்கள்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, நாடாளுமன்ற உறுப்பினர்களின் இவ்வாறான தரக்குறைவான நடத்தைகளைக் கட்டுப்படுத்த ஒரு வழிமுறையை உருவாக்குங்கள். இந்த நாடாளுமன்றத்தில் இப்போது இருக்கும்எதிர்க்கட்சிஅங்கத்தவர்களின்எண்ணிக்கையை விட மேல் மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாகும். நாடாளுமன்றத்திற்குள்ளும் அந்த மாற்றம் தேவைப்பட்டதனாலேயே, மக்கள் எதிர்க்கட்சியை இந்த நிலைக்குத் தள்ளியுள்ளனர் எனக் கூறிய பிரதமர், விவாதம் செய்யும் அதேநேரம் ஒழுக்கத்துடன் நடந்துகொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்

# தனிப்பட மன்னிப்புக் கேட்டேன் இதனை அரசியலாக்காதீர்கள்

## பிரசாத் எம்.பி. பிரதமரிடம் வேண்டுகோள்

நாடாளுமன்ற பெண் பிரதிநிதிகளையோ அல்லது பெண்களையோஅவமதிக்கும்நோக்கம்எனக்குகிடையாது. இவ்விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் லக்மாலி ஹேமசந்திரவிடம் தனிப்பட்ட முறையில் மன்னிப்பு கோரியுள்ளேன். இதனை அரசியலாக்க வேண்டாம் என்று பிரதமரிடம் கேட்டுக்கொள்கிறேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரசாத் சிறிவர்தன சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது ஒழுங்குப்பிரச்சினையை முன்வைத்து உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது:

பிரதமர் எனது பெயரை குறிப்பிட்டு சபையில் உரையாற்றியிருந்தார்.ஆளும் தரப்பின் உறுப்பினர் லக்மாலி ஹேமசந்திரவையோ அல்லது பெண்களையோ அவமதிக்கும் நோக்கம் எனக்கு கிடையது. நேற்று (நேற்று முன்தினம்) உரையாற்றிக் கொண்டிருக்கையில் ஏற்பட்ட தர்க்கத்தால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டது.

எனது உரைக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் லக்மாலி ஹேமசந்திர செயற்பட்டார். அவரது செயற்பாட்டை நான் சுட்டிக்காட்டினேன். எனது கருத்துக்களினால் அவருக்கு அசௌகரியம் ஏற்பட்டதாக பின்னர் குறிப்பிடப்பட்டது. ஆகவே நான் அவரிடம் தனிப்பட்ட முறையில் மன்னிப்பு கோரினேன்.

பெண்களை அவமதிக்கும் நோக்கம் எனக்குக் கிடையாது. நேற்று (நேற்று முன்தினம்) சபையில் ஏற்பட்ட தர்க்கம் அன்றே முடிவடைந்து விட்டது. நான் அதனை பெரிதுப்படுத்தவில்லை. ஆகவே இந்த விடயத்தை அரசியலாக்கக்கூடாது என்று பிரதமரிடம் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

# எதிர்க்கட்சி பெண் எம்.பியை பிரதி அமைச்சர் அவமதித்தபோது பிரதமர் பேசாமலேயிருந்தார்

## அப்புஹாமி எம்.பி. குற்றச்சாட்டு

*எதிர்க்கட்சித்தரப்பு பெண் நாடாளுமன்ற உறுப்பினரை பிரதி அமைச்சர் ஒருவர் இந்தச் சபையில் அவமதித்துப் பேசியபோது பிரதமர் ஹரினி அதனைக் கண்டுகொள்ளவில்லை. எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக மட்டுமே அவர் பெண் உரிமை பேசுகிறார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.*

*நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோது இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:*

*ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் தமது பெரும்பான்மையை பயன்படுத்திக் கொண்டு எதிர்க்கட்சியினர் மீது பெரும் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். சேறு பூசுகிறார்கள். நாடாளுமன்றத்தின் ஹன்சாட் பதிவுகளை ஆராய்ந்தால் இதனை விளங்கிக் கொள்ளலாம்.*

*பெண்களின்உரிமைபற்றிபிரதமர்சபையில் பேசினார். எதிர்க்கட்சியின் உறுப்பினர் பிரசாத் சிறிவர்தன ஆளும் தரப்பின் பெண் உறுப்பினரை அவமதிக்கவில்லை. அவர் நேற்று (நேற்று முன்தினம்) சபையில் முறையற்ற வகையில் செயற்பட்டார். அதற்குத்தான் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசாத் சிறிவர்தன எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.*

*எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினிகவிரத்னவை அவமதிக்கும்வகையில் ஆளும்தரப்பின் பிரதி அமைச்சர் கருத்து தெரிவித்திருந்தார். அப்போது அதனை பிரதமர் கருத்திற் கொள்ளவில்லை. பெண் உரிமைகள் பற்றிப் பேசவில்லை. பெண் உரிமைகள் பற்றி பேசுவதாயின் அனைவருக்கும் பொதுவானதாக பேச வேண்டும் என்பதை குறிப்பிட்டுக் கொள்கிறேன் என்றார்.*

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அறுபதாவது கூட்டத்தொடர், இலங்கை தொடர்பாக எதிர்பார்த்த விடயங்களை, எதிர்பார்த்த திசையிலும் வேகத்திலுமே நகர்த்தி வருகிறது. முடிவில் அவர்கள் நிறைவேற்றும் தீர்மானம் நீர்த்துப் போய்விட்டது என்றோ, உப்புசப்பில்லாதது என்றோ, இங்கேயும் புலம்பெயர்ந்தோர் மத்தியில் இருந்தும் தமிழர் குரல்கள் ஒலிக்கும். இடைப்பட்ட நான்கு கிழமைகளுக்கு இடையே தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள தீர்மான நகலில் அங்கொன்றும் இங்கொன்றுமாக 'இலக்கண பிழைகள்' திருத்தப்படும். அவ்வளவுதான்.

இனப்போர் முடிந்த காலகட்டத்தில் சர்வதேச சமூகத்திடம் புலம்பெயர்ந்த தமிழர் குழுக்களுக்கு இருந்த தொடர்பு தற்போது இல்லை. அப்போதெல்லாம் சர்வதேச சமூகம் என்று இன்றளவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகளுக்கு, அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்சவின் குடும்ப அரசியல் மற்றும் சீனாவைச் சார்ந்த அவரது கொள்கைகளை முடிவிற்கு கொண்டு வரவேண்டிய அவசியம் இருந்தது. எப்போது, மஹிந்த 2015 அரசுத் தலைவர் தேர்தலில் தோல்வியுற்றாரோ, எப்போது அவரது இளைய சகோதரர் கோட்டாபய ராஜபக்ச அரசுத் தலைவர் பதவியில் இருந்து 'அரகலயா' போராட்டத்தின் மூலம் வீட்டிற்கு அனுப்பப்பட்டாரோ, அப்போதே மேலை நாடுகளுக்கு இலங்கை மனித உரிமைகள் குறித்த கரிசனம் குறைந்துவிட்டது.

இப்போது சர்வதேசம் செய்வதெல்லாம், அன்று தொடங்கிய அவர்களது 'அறப் போரை' முடிக்க தெரியாமல் முனகுவதுதான். இன்னும் சொல்லப்போனால், தற்போதைய அரசுத் தலைவர் அநுரகுமாரவின் தலைமை, மேற்கூறிய சர்வதேசம் 'எள்' என்று சொன்னால் 'எண்ணெய்' கொண்டு செல்லுகிறார்கள் என்ற கருத்து பரவலாக இருக்கிறது. எனவே, அங்கொன்றும் இங்கொன்றுமாக, அதிபர் அநுர தலைமையிலான ஜேவிபி-என்பிபி கூட்டணி அரசை சர்வதேசம் நோகாமல் அடிக்க, அவர்களும் அழாமல் அழுது காட்டுகிறார்கள்.



# ஆட்சி மாறினாலும்...

**என். சத்திய மூர்த்தி**



## அவசர சிகிச்சை

காரணம் இதுதான். இதற்கு முந்தைய அதிபர் ரணில் விக்கிரமசிங்கேவின் ஆளும்தரப்புபோல், தற்போதைய ஆளும்தரப்பும் பொருளாதார சிக்கல்களைத் தொடர்ந்து எதிர்கொண்டு வருகிறது. அப்போது. ரணில் முன்னால் இருந்த பிரச்சினைகளில் ஒரு சில பிரச்சினைகளுக்காவது உடனடி நிவாரணம் தேவையாய் இருந்தது. தற்போதைய நிலைமை வேறு. ரணில் தலைமையால் நிவர்த்தி செய்யப்பட்ட பொருளாதாரப் பிரச்சினையின் காரணமாக, இந்த அரசு சிறிது மூச்சு வாங்க முடிகிறது. நாட்டின் பொருளாதாரம் தற்போது 'அவசர சிகிச்சை' பிரிவில் இருந்து வெளிவந்துள்ளது. அது குறித்த நிம்மதி பெருமூச்சே இந்த அரசின் அரசியல் மற்றும் பொருளாதார முதல்.

ஆளும்தரப்பின் இந்தப் பிரச்சினை குறித்து சர்வதேசம் நன்றாகவே உணர்ந்து இருக்கிறது. மனித உரிமை மீறல், மனித உரிமை பேரவை என்றெல்லாம் பயமுறுத்தி இந்த ஆட்சிக்கு ஆட்டம் கொடுத்தால், அதனால் சாதிக்கப்போவது ஒன்றுமில்லை என்பது அவர்களுக்கு தீர்க்கமாகவே தெரிந்திருக்கிறது. என்ன, சிந்தாந்த ரீதியாக இடதுசாரி சிந்தனையும் அதன் காரணமாக சர்வதேச அரசியலில் சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளை நோக்கியும் அரசியல் செய்த தற்போதைய அரச தலைமை, அதிலிருந்து மெதுவாக நழுவி, சித்தாந்தத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, ஆட்சி –அரசியலில் மட்டுமே தனது முழுக் கவனத்தையும் செலுத்தி வருகிறது.

இதன் காரணமாகவும், அதிபர் அநுரவின் தலைமை, அண்டை நாடான இந்தியாவுடன் கடந்த காலக் கலக அரசியலை விட்டுவிட்டு நட்புப் பாராட்டுகிறது. ரணில் தலைமை தொடக்கி வைத்த பொருளாதார ஒத்துழைப்பு விவகாரங்களை முன்னெடுத்து, பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைப் பயணத்தின்போது, ஏழு ஒப்பந்தங்களில் கைசாத்திட்டது. அதைவிட அதிமுக்கியமாக, ஐ.எம்.எப். என்று அறியப்படும் சர்வதேச நாணய இணையத்தின் பொருளாதாரக் கட்டளைகளை சிரமேற்கொண்டு, ரணில் ஆளும்தரப்பின் உறுதிமொழிகளை நிறைவேற்றி வருகிறது. அதிபர் அநுர சீனாவிற்குச் சென்றாலும், அந்த நாட்டுடனான உறவை கட்டுக்குள் வைத்துள்ளார்.

இத்தனை தூரம் மேலை நாடுகளின் எதிர்பார்ப்புகளை செயலாக்கிய பின்னர், இந்த ஆளும்தரப்புக்கு அடுத்தடுத்து சர்வதேச சமூகம் எதற்காக மேலும் புதிய பிரச்சினைகளைக் கொடுக்கப்போகிறது? போதாததற்கு, 'எடுத்தோம், கவிழ்த்தோம்' என்ற ரீதியில், கோட்டாபய ஆளும்தரப்பை, ஜேவிபி மறைந்திருந்து தலைமைத்துவம் நல்கிய மக்கள் போராட்டத்தின் மூலம் கவிழ்த்துவிட்டு, தற்போது வேறு தெரிவுகள் (சாய்ஸ்) இல்லாமல் தவிப்பது சர்வதேசம்தானே!

இடைப்பட்ட காலத்தில் ரணில் அரசுத் தலைவர் பதவியை வகிப்பார் என்றெல்லாம்கூட அவர்கள் கணக்கு போட்டிருக்கலாம். ஆனால், அடுத்து நடந்த அரசுத் தலைவர் தேர்தலில், அவர் வெற்றி பெறமாட்டார் என்றோ, அல்லது அவர்கள் கைபிள்ளையாக மட்டுமே கருதி பயன்படுத்திய ஜேவிபி தலைமை வெற்றிபெறும் என்றோ அவர்கள் கணக்கிடவில்லை.

## பழைய மொந்தையில்

மனித உரிமைகள் பேரவையில், அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த உயராணையர் வோல்கர் ட்ர்க் அவர்களின் வழமையான அறிக்கை ஆகட்டும், தொடர்ந்து அதற்கு ஜெனிவாவில் பதில் அளித்த அயலுறவுத் துறை அமைச்சர் விஜித ஹேரத் வழங்கிய விளக்கங்கள் ஆகட்டும், அல்லது தற்போது ஒரு சுற்று வந்திருக்கும் புதிய தீர்மான வரைவு ஆகட்டும், அனைத்துமே 'பழைய மொந்தையில் பழையகள்' என்ற வசனத்திற்கு பொருள் சேர்க்கும் விடயங்களே. இந்த அறிக்கைகளை அளித்த டர்க் மற்றும் ஹேரத் ஆகிய தனி மனிதர்களை விட்டால், அதனை 'புதிய மொந்தையில் பழைய கள்' என்றுகூடக் கூற முடியாது. இதுவே உண்மை.

என்றாலும், இவற்றின் பின்னால் தொக்கிநிற்கும் இலங்கை அரசியல் நிலைமை கூர்ந்து கவனிக்கதக்கது. குறிப்பாக, ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை என்பது போல், போர் குற்றங்கள் மற்றும் பொறுப்புகூறல் விடயங்களில் விசாரணை குறித்து இனப்போர் முடிந்த காலம் தொட்டு பதவிக்கு வந்த ஆளும்தரப்புகளும் அரச தலைமைகளும் கூறிவந்ததையே இந்த ஆளும்தரப்பும் தொடருகிறது. அதாவது, சர்வதேச விசாரணைக்கு அனுமதி இல்லை. மாறாக உள்ளக பொறிமுறைகள் மூலம் விசாரணை மேற்கொள்ளத் தயார். இதுதான் பழைய பல்லவி. இதனையே அமைச்சர் விஜித ஹேரத் அவர்களும் இந்த முறை ஜெனிவாவில் அட்சரம் பிசகாமல் பாடி உள்ளார்.

இதன் பின்னால் உள்ள அரசியல் உண்மையை குறிப்பாக தமிழ் தலைமைகள் புரிந்துகொள்ளவேண்டும். அது போன்றே, சர்வதேச தலைமைகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதாவது, தென்னிலங்கையில் யார் ஆட்சிக்கு வந்தாலும், போர்க் குற்றங்கள் மற்றும் பொறுப்புகூறல் விடயங்களில், இலங்கை இராணுவத்தினரை சர்வதேச விசாரணைக்கு உள்படுத்த ஒப்புக் கொள்ளவேமாட்டார்கள். குறிப்பாக, இதில் அதிபர் ரணில் ஆட்சி தவிர்த்த அனைத்துமே, மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமை எனும்போது, அவர்களது முடிவிற்கு பின்னால் இருக்கும் அரசியல் ஆளுமையின் வீர்யம் புரியும்.

## நம்பகத்தன்மை

இது இப்படி இருக்க, உள்ளகப் பொறிமுறை மூலம் பொறுப்புக் கூறல் விடயங்களில், தீர்வு எட்டப்படும் என்று ஆளும்தரப்பு உறுதி அளித்துள்ளதாக வோல்கர் ட்ரக் கொழும்பு பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அறிவித்திருந்தார். அதனை ஜெனிவாவில் தனது அறிக்கையிலும் குறிப்பிட்டுள்ளார். இது வரவேற்கதக்க விடயம்தான் என்றாலும், நாட்டின் இராணுவத்தில் தற்போது சேவை செய்வோர் மற்றும் ஓய்வு பெற்றோர் என்று பெருவாரியான எண்ணிக்கையில் குற்ற செயல்களுக்காக நீதிமன்றங்களின் முன் நிறுத்தப்படுவார்களேயானால், அதன் சமூக விளைவுகள் குறித்து இந்த ஆளும்தரப்பு மட்டுமல்ல, எந்தவொரு ஆளும்தரப்பும் கவலைப்படும்.

அதுவும் குறிப்பாக, அப்போதைய ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த டாரூஸ்மான் அறிக்கையில் குறிப்பிட்ட நாற்பதாயிரம் அப்பாவிகள் இராணுத்தினரால் கொல்லப்பட்டார்கள் என்ற எண்ணிக்கை, அரசிடம் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியது. அது மட்டுமல்ல. அந்த அறிக்கை வெளியில் 'லீக்' செய்யப்படும் வரை, தலைநகர் கொழும்புவில் உள்ள மேலைநாடுகளின் தூதரகங்கள், உயராணையர் அலுவலகங்கள், சுமார் ஐயாயிரம் முதல் எட்டாயிரம் அப்பாவி தமிழர்கள் மட்டுமே கொல்லப்பட்டார்கள் என்று உறுதியாக அன்றைய இலங்கை அரச அதிகாரிகளிடம்கூடத் தெரிவித்திருந்தன. தங்கள் அரச தலைமைகளிடம் நிச்சயமாக தங்களது கருத்துகளை அறிவித்திருந்தனர்.

இப்போது, உள்நாட்டு அல்லது சர்வதேச பொறிமுறையின் அடிப்படையில், பொறுப்புகூறல் குறித்த விசாரணை முன்னெடுக்கப்படுமேயானால், அவர்களில் ஒன்றோ அல்லது பல அதிகாரிகளோ, சாட்சிக் கூண்டில் ஏறி தாங்கள் அறிந்த 'உண்மை' குறித்துச் சாட்சியம் அளித்தால்? அல்லது, தாங்கள் அறிந்த 'உண்மை' குறித்தெல்லாம் தங்கள் நாட்டுப் பத்திரிகைகளிலும், தொலைகாட்சிகளிலும் பேட்டி அளித்தால்? அதன் காரணமாகவே பொறுப்புகூறல் விசாரணையின் நம்பகத்தன்மை இல்லாது ஆகிவிடாதா?

## கட்டளை தொடர்

இந்த அரசை பொறுத்தவரையில் போர் குற்றங்கள் மற்றும் பொறப்புகூறல் விடயங்களில் தங்களது அரசியல் எதிரிகளை சிக்கவைக்க வேண்டும் என்றே கருதுவார்கள். ஆனால், இராணுவ கட்டளை தொடர் மூலம் அவர்களை எட்ட முனைந்தால், அதில் அப்போதைய அரசியல் தலைமைகள் கடைசி கட்டத்திலேயே உள்ளிழுக்கப்படுவார்கள். இது கிருஷாந்தி பாலியல் படுகொலை சம்பவத்தில் குற்றஞ்சாட்டப்பட்டு, தண்டனை அனுபவித்துவரும் முன்னாள் இராணுவச் சிப்பாய் சோமரத்னே ராஜபக்சவின் புதிய வாக்குமூலங்களுக்கும் பொருந்தும். செம்மணி புதைகுழி விடயத்தில், சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட்டால், தனது கட்டளை அதிகாரிகளுக்கு எதிராக வாக்குமூலம் அளிக்க தயார் என்று அவர் கூறியிருந்தாலும் அதன் அடிப்படையில் குற்றப் புலனாய்வு செய்த பின்னரே வழக்கு தொடரப்படும் என்பதே உண்மை நிலை.

இது இப்படி இருக்க, மனித உரிமை கவுன்சில் நடவடிக்கைகளில், இதுபோன்ற விடயங்களில் இராணுவத்தை போலவே, விடுதலைபுலிகள் அமைப்பினர் மீதும் பாரபட்சமற்ற விசாரணை மேற்கொள்ளவேண்டும் என்று இலங்கை அல்லாத உறுப்பு நாடுகளே கோரிக்கை வைத்துள்ளன. அது குறித்து அவர்கள் தீவிரமாக இருக்கிறார்களோ இல்லையோ, இலங்கை அரசு அந்த குறிப்பிட்ட விடயத்திலும் அதீதமான முன்னெடுப்புகளை செய்ய தயங்காது.

அவ்வாறு நடைபெறுமேயனால், முன்பு மஹிந்த அரசு நியமித்த நீதியரசர் பரணகமா விசாரணை ஆணைக்குழு கோரியது போல், மேலை நாடுகளில் மாற்றுப் பெயர்களில் வசிக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான கோரிக்கையும் முன்வைக்கப்படலாம். அதிகாரபூர்வமாக, அந்த விசாரணை, காணாமல்போனோரில் வெளிநாடுகளில் மாற்றுப் பெயர்களில் வசிக்கும் தமிழர்களை அடையாளம் காண்பதற்கு என்று கூறப்பட்டாலும், அதற்கு இப்படி ஒரு பயனும் அரசிற்கு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது என்பதை மறுத்துவிட முடியாது.

என்ன, அப்போது, மேலை நாடுகள் எதுவுமே பரணகமா ஆணைக்குழுவின் கோரிக்கையை கிடைக்கப்பெற்றதாககூட பதில் அளிக்கவில்லை. ஆனால், அந்த நிலைமை தற்போதும் தொடருமேயானால், பின்னர், போர் குற்றங்கள் குறித்து இலங்கை இராணுவத்தினரை விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் என்று கூற மேலை நாடுகள் தங்களது தார்மீக உரிமையை முழுவதுமாக இழந்து விடுவார்கள். பின்னர், அதனையே அரசியல் முதலாக வைத்து இங்குள்ள அரசும் தன்னை காப்பாற்றிக் கொள்ள முயலும். அவ்வளவுதான்.

## கர்ப்பிணிகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைத் தேர்தல் காலம் என்பதால் தேர்தல் ஆணையாளரின்உத்தரவுக்குஇணங்கஅந்த கொடுப்பனவுவழங்குவதைஒத்திவைப்பதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டது. அந்த நிதியை பயன்படுத்தியே மந்த போசனத்துடன் காணப்படும் தாய்மாருக்கு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளோம்.

கடந்த ஆளும்தரப்புக் காலங்களில் இவ்வாறு ஒதுக்கப்பட்டு இடையில் நிறுத்தி வைக்கப்பட்ட நிதி அப்போதைய அமைச்சர்கள், அரசுத் தலைவர்க்கும் போய் சேர்ந்துள்ளது. அந்தவகையில்எமதுஆளும்தரப்புஎப்போதும் மக்கள் நலனுக்கு முன்னுரிமையளித்து செயற்படுகின்றது என்பதை குறிப்பிட வேண்டும்.

சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சினூடாக நாட்டில் வாழ்கின்ற கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கர்ப்ப காலத்தில் ஆறு மாதங்களுக்கும் அதன் பின்னர் பாலூட்டும் காலங்களில் நான்கு மாதங்களுக்குமாக 10 மாதங்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் டிசம்பர் மாதத்தில் 5000 ரூபா கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை அதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

ஒரு லட்சத்து 60 ஆயிரத்து இருநூறு பயனாளிகளை தெரிவு செய்து அவர்களுக்கு 5000 ரூபா பெறுமதியான உணவுப் பொதியை வழங்குவதற்கான வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

2 லட்சத்துக்கு 80 ஆயிரம் கர்ப்பிணித் தாய்மார்கள் நாட்டில் தற்போது உள்ளனர்.அவர்களில் மந்த போசனத்தோடு காணப்படும் தாய்மாரை முக்கியமாக தெரிவு செய்து உணவுப் பொதியை வழங்க நடவடிக்கை எடுப்போம் என்றார்.

## மனித....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரீதியான மன்னார் மாவட்ட மண்ணையும் உயிர்களையும் காப்பாற்றுவதற்கான போராட்டமே ஆகும்.

அந்த போராட்டத்தில் அங்குள்ள இளைஞர்கள் தமது மக்களுக்காக தியாகங்களை செய்யவும் தயாராக இருக்கின்றனர். ஆளும்தரப்பு இந்த விடயத்தில் சரியான முறைமையை கையாள வேண்டும். அங்குள்ள மக்களின் உணர்வுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதற்காக அந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். இந்த விடயத்தில் ஆளும்தரப்பு பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

ஐ. நா தீர்மானம் மிக இறுக்கமாகியுள்ளது. எங்கள் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயத்தை கோரும் வகையில் ஐ. நா தீர்மானம் மிகவும் வலுவாக இருக்கும் நிலைமையில், வெளிவிவகார அமைச்சர் உள்ளக பொறிமுறையில் மனித உரிமை மீறல் தொடர்பான விடயங்களை கையாளப் போவதாக கூறுகின்றார். அது எப்படி சுடச் சொன்னவரை காப்பாற்றிவிட்டு சுட்டவரை விசாரிப்பதா? களவெடுக்க சொன்னவனை விட்டுவிட்டு களவெடுத்தவனை விசாரிப்பதா? எங்களை பொறுத்தவரையில் உள்ளக விசாரணைகளை நாங்கள் ஒருபோதும் ஏற்கமாட்டோம். சர்வதேசகண்காணிப்புடன் விசாரணைகள் நடக்க வேண்டும். ஆளும்தரப்பு நியாயமாக நடந்துகொள்ளும் என்று நம்புகின்றோம்.

கடந்த காலங்களில் மனித உரிமை மீறல்களில் இந்த ஆளும்தரப்பின் ஒரு அமைப்பு பாதிக்கப்பட்டுள்ளது. மக்களை கொன்று குவித்தவர்களை தண்டிக்க வேண்டும் என்பதே பிரதான நோக்கமாகும். இதனால் இந்த விடயத்தில் உள்ளக விசாரணையை ஏற்றுக்கொள்ள முடியாது.

இதேவேளை மனித உரிமை மீறல் தொடர்பில் இந்தியா தனது கருத்தை ஆழமாக பதிவு செய்துள்ளது. இதனை பாராட்டுகின்றோம். மாகாண சபை முறைமை அரசியல் ரீதியிலான அதிகார பரவலாக்கலை செய்ய வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது. இதனை வரவேற்கின்றோம் என்றார்.

## உள்ளக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டதாக வெளிவிவகார அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



உ

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# மஹாளய பக்ஷம் எனும் மகத்தான புண்ணிய தினங்கள்.

விசுவாசு வருடம் ஆவணி மாதம் 22 ஞாயிற்க்குகிழமை முதல் புரட்டாசி மாதம் 5 ம் நாள் ஞாயிறு கிழமை வரை செப்டம்பர் 07 முதல் செப்டம்பர் 21/22 ஞாயிறு/திங்கள் கிழமை வரை




### பித்ரு பக்ஷத்தின் முக்கியத்துவம்

பித்ரு தேவதைகள் இந்த இரண்டு வாரங்களில் அவர்களுக்கு வழங்கப்பட்டதைப் பெறுவார்கள். பித்ரு லோகத்தில் ஒரு நாள் மனித நாட்காட்டியில் ஒரு மாதத்திற்குச் சமம் என்று நமது புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களுக்குஇ ஒரு இரவு கிருஷ்ண பக்ஷம்இ மற்றொரு நாள் சுக்ல பக்ஷம். இந்த நேரத்தில் செய்யப்படும் பிரசாதங்கள் ஆண்டு முழுவதும் நீடிக்கும்.

பித்ரு லோகம் என்பது சொர்க்கத்திற்கும் பூமிக்கும் இடையிலான ஒரு நிலமாகும்இ அங்கு ஒரு நபரின் மூன்று தலைமுறை முன்னோடிகள் வாழ்கின்றனர். இறந்த ஆன்மாக்கள் பிறப்புச் சுழற்சியில் சேரும் வரை இங்கு தங்கியிருப்பதாக நம்பப்படுகிறது.

மூதாதையர்களும்மூதாதையர்களிடம்பிரார்த்தனை செய்பவர்களும் மோட்சத்தைப் பெறுவார்கள். ஆன்மாக்கள் பிதுர் பக்ஷத்தின் போது தங்கள் மூதாதையர்களின் வீடுகளுக்குச் சென்று உணவை உண்ணவும்தண்ணீரைக் குடிக்கவும் இறங்குவார்கள்.

கருட புராணத்தின் படி மகாளய பக்ஷத்தில் பித்ரு பூஜைசெய்வது அமைதியைக்கொண்டுவரும்இமேலும் பித்ருக்கள் தங்கள் சந்ததியினருக்கு அனைத்து நற்செயல்களையும் அருளுவார்கள். மகாளய சிராத்தம்நமது முன்னோர்கள் சரியான நேர்மையுடனும் தூய்மையான இதயத்துடனும் செயல்படும்போது கர்ம பந்தங்களிலிருந்து விடுபட்டு மோட்சத்தை நோக்கி நகர உதவுகிறது என்று அக்னி புராணம் கூறுகிறது. மூதாதையர்களுக்கு வருடாந்திர ஷ்ரத்தாழ்வாரை செய்யத் தவறியவர்கள்இ இந்த நேரத்தில் காகங்கள் மற்றும் பசுக்களுக்கு உணவளிப்பது நல்லது.

மஹாளய அமாவாசை செப்டம்பர் 21 ஞாயிறு கிழமை 21.09.2025

செப்டம்பர் 07இ 2025இ ஞாயிற்க்குகிழமை பூர்ணிமா ஷ்ராத்தா பௌர்ணமி இ செப்டம்பர் 21 ஞாயிறு கிழமை 21.09.2025 சர்வ பித்ரு அமாவாசை. வரை 16 நாட்கள் மஹாளயபக்ஷம் அமாவாசை மஹாளய அமாவாசை செப்டம்பர் 21 ஞாயிறு கிழமை 21.09.2025 நாள் வருகிறது பித்ரு தோஷம் நீக்கும் அமாவாசை தவரவிடாதீர்கள்

நம்மீது வைத்துள்ள ஈடிணையற்ற கருணையினால்இ பித்ருக்கள் எனப் பூஜிக்கப்படும் நம் முன்னோர்கள் எங்கோ கற்பனைகளுக்கும் மீறிய பலப் பல கோடி மைல்களுக்கு அப்பால் உள்ள பித்ருக்களின் உலகத்தில் இருந்துஇ ஸ்வர்ணமயமான விமானங்களில்இ சூர்ய கதிர்களின் வழியாக பூவுலகிற்கு எழுந்தருளிஇ மஹாளய பட்சம் எனும் அந்த பதினைந்து புனித தினங்களிலும் நம்முடன் தங்கியிருக்கிறார்கள் என்று வேதகால மகரிஷிகள் அருளியுள்ளனர்.

கிடைத்தற்கரிய புண்ணிய பலனை நமக்கு அளித்தருளும் அந்தப் பதினைந்து நாட்களும் – நாம் தூய்மையானஉள்ளத்துடன் இருக்கவேண்டும். வீட்டை தூய்மைப்படுத்திஇ சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பதினைந்து நாட்களிலும்இ வீட்டில் எவருடனும் சண்டையிடுவதோஇ அல்லது தவறான வார்த்தைகள் பேசுவதோ அல்லது அசைவ உணவு உண்பதோ கண்டிப்பாகக் கூடாது. ஏனெனில்இ அப்போது நம் முன்னோர்கள் நம் வீடுகளில் தங்கியிருக்கிறார்கள்.

அவர்களது தேஜஸ்ஸை (தெய்வீக ஒளி) நம் ஊனக்கண்களில் பார்த்தால்இ அந்த ஒளியின் பிரகாசத்தினால்நம்பார்வைபோய்விடும். ஆதலால்தான் அப்பெரியோர்கள் தங்கள் ஒளியை மறைத்துக் கொள்கிறார்கள்.

சக்தி உள்ளவர்கள் தினமும் சிராத்தம் செய்யலாம். இதற்குவசதியில்லாத அன்பர்கள் அவரவர்கள் தங்கள் தந்தை இறைவனடி சேர்ந்த திதியன்று செய்யலாம். தந்தை காலமான தினத்தின் திதி தெரியாதவர்கள் ஏகாதசி அல்லது மஹாபரணி ஆகிய தினங்களில் செய்யலாம். புண்ணிய நதிக்கரையில் செய்வது மிகச் சிறந்த நற்பலனை அளிக்கும்.

பக்ஷம் என்றால் 16 நாட்கள்; மஹாளயம் என்பது பித்ரு தேவதைகள் வசிக்கும் இடம். பித்ருக்கள் பூமிக்கு வந்து நம்முடன் சூக்ஷ்ம ரூபத்தில் வசிக்கும் 16 நாட்களே மஹாளய பக்ஷம். புரட்டாசி மாச அமாவாசைக்கு முந்தைய 16 நாட்களை மாஹாளய பக்ஷம் என்று பெயர். புரட்டாசி அமாவாசையை மஹாளய அமாவாசை என்று சொல்கிறோம்.

இந்த நாட்களில் நமது மூதாதை யர்களான பித்ருக்கள் பூலோகத்திற்கு சூக்ஷம ரூபத்தில் வந்து நாம் அளிக்கும் பித்ருதர்பணங்களை நேரடியாக எற்பகிறார்கள். பொதுவாக பித்ருக்கள் எல்லா நாட்களிலும் பூலோகம் வர இயலாதாம். ஒவ்வொரு அமாவாசைஇ மாசப்பிறப்பு மற்றும் அவர்கள் மறைந்த திதி நாட்கள் மற்றும் மஹாளய பக்ஷத்தில் மட்டுமே அவர்களால் பூலோகத்திற்கு வர இயலுமாம். அதனால்தான் அவர்கள் வரும் தினங்களில் பித்ரு பூஜையை செய்யச் சொல்லியிருக்கிறார்கள் மஹரிஷிகள்.

விசுவாசு புரட்டாசி அமாவாசையன்று சகல லோகங்களிலும் இருக்கும் மஹரிஷிகள், தேவர்கள்மற்ஸ எல்லா ஜீவன்களும் பூலோகத்திற்கு வந்து பித்ரு தர்பணம் செய்வதாகச் சொல்லப்படுகிறது. நமது பித்ருக்களான வசு, ருத்ர, ஆதித்யர்கள் கூட பூலோகம் வந்து பித்ரு தர்பணங்களை சூக்ஷ்ம ரூபமாய் செய்கிறார்கள் என்பர்.

அமாவாசை, மாசப்பிறப்பு மற்றும் க்ரஹண காலங்களில் செய்யும் தர்பணமானது நமது தந்தை மற்றும் முந்தைய 2 தலைமுறையினருக்கும், தாய் வழியில் 3 தலைமுறையினருக்குமாக 12 பேர்களுக்கு மட்டுமே செய்யப்படுகிறது.ஆனால் மஹாளயபக்ஷத்தில் மட்டுமே காருணீகர்கள் எனப்படும் மாமா–மாமி,பெரியப் பா–பெரியம்மா,அத்தைகள், சகோதரர்கள்– அவர்களது மனைவிகள்இ சித்தப்பா–சித்தி, மாமனார்–மாமியார், குரு, நண்பர்கள் ஆகிய எல்லோருக்கும் செய்ய முடிகிறது.பித்ருக்களுக்கு உணவாவது எள் கலந்த நீரே. இதனை மந்த்ர பூர்வமாக அவரவர் பெயர் சொல்லி அளிப்பதன் மூலம் அவர்களது ப்ரீதிக்குப் பாத்திரமாகிறோம்.

இறந்தவர்கள் எங்கோ மறுபடி பிறந்திருப்பார்களே பின் எதற்கு இவை என்று ஒரு கேள்வி வரும்.அவ்வாறு பிறந்தாலும்இ மீண்டும் பிறந்த அந்த ஜீவனுக்கு அந்த நேரத்தில் வேண்டிய பொருளாக நாம் அளிக்கும் எள்ளும்–நீரும் மாறிவிடும் என்கிறார்கள். இன்னொரு கருத்துப்படிஇ நமது முன்னோர்கள் மற்றொரு பிறவி எடுத்தாலும்இநாம் செய்யும் சிராத்தம்ஃதர்பணம்போன்றவை ஸ்ரீவிஷ்ணுவுக்குப் ப்ரீதியாகிவிடுவதாகவும்இ செய்யத் தகுதியுடையவன் செய்யாது விடக்கூடாது என்பது பெரியவர்கள் கூற்று.

### மஹாளயத்தை மூன்று விதங்களில் செய்யலாம்.

பார்ணவம் எனப்படும் ஹோமத்துடனான சிராத்தமாகவும்இ ஹோமமில்லாது ஹிரண்ய சிராத்தமாகவோஇ அல்லது தர்பண ரூபமாகவோ செய்வது வழக்கம். நமது பொருளாதாரஇ இட–கால வசதிக்கு ஏற்ப ஏதேனும்ஒரு வழியைப் பின்பற்றியோ அல்லது குலவழக்கத்தின்படியோ செய்வது அவசியம். 16 தினங்களும் தர்பணம் செய்வதற்கு பக்ஷ–மாளயம் என்று பெயர்.

இதனைச் செய்ய இயலாதவர்கள் விசேஷ தினங்களானமஹாபரணிஇமத்யாஷ்டமிஇவ்யதிபாதம்இ கஜச்சாயாஇஅல்லது தமது தாய்ஃதந்தையின் திதிகளில் மட்டுமாவது ஹிரண்ய ரூபமாக சிராத்தம் செய்து அன்னமிடுதல் வேண்டும். குடும்பத்தில் யாரேனும் சன்யாசியாகி மரணமடைந்திருந்தால் அவர்களுக்கு மாஹாளய ஏகாதசியன்று சிராத்தம் செய்வதும் துர்மரணமடைந்தவர்களுக்கு சதுர்தசி உத்தமமானதாகச் சொல்லப்படுகிறது.

பொதுவாக நாம் தர்பணங்கள் செய்யும் போது நமது வலதுகை ஆள்காட்டி விரலுக்கும்இ கட்டைவிரலுக்கும் நடுவிலாக நீரை வார்க்கிறோம். இந்த இருவிரல்களுக்கு நடுவில் இருக்கும் ரேகைகளை பித்ரு–பூம்ய ரேகைகள் என்பர். இந்த ரேகைகள் மூலமாக அளிக்கப்படும் நீரானது பித்ருக்களுக்கானதாக மாறிவிடுகிறதாம்.

இந்த 16 நாட்களும் சிராத்தம்இ தர்பணம் போன்றவை மூலமாக தான தர்மங்களைச் செய்தல் பித்ருக்களுக்கு மிகவும் பிடித்தமானதாச் சொல்லப்படுகிறது. இவ்வாறு ப்ரீதியான பித்ருக்கள்

காலைக்கதிர் Kalaikkathir

# மஹாளய பக்ஷம்......

7ம் பக்கத் தொடர்ச்சி...........

நமது வம்சம் தழைக்கவும்இ நோய்-நொடியற்ற வாழ்வுக்கும் ஆசிர்வாதிக்கின்றனர். நமது வாழ்வுக்கு நல்லது என்பது ஒருபுறமிருந்தாலும்இ நம்மை வளர்த்து ஆளாக்கிய நமது பெரியவர்களுக்கு நாம் செய்யும் நன்றி அறிவித்தல் என்ற எண்ணத்திலாவது இந்த பித்ரு பூஜையை விடாது செய்ய வேண்டும். அவரவர் குலாசாரத்தின்படியாக எப்படிச் சொல்லப்பட்டிருக்கிறதோ அதன்படியாக செய்து மூதாதயர்களை வணங்கிஇ அவர்களது அருளை நாடுவோம்.

## மஹாளய பக்ஷம் எனும் மகத்தான புண்ணிய தினங்கள்

மஹாளயத்தில் வரும் திதிஇ நட்சத்திரம்இ யோகம் அடிப்படையில் தர்பணம்இ தான தர்மம் வழிகளில் முன்னோர்களை வழிபட மிகவும் உன்னதமான நாட்கள் கீழே தரப்பட்டுள்ளது

## மஹாளயபக்ஷம் தர்ப்பண பலன்கள்!

செப்டம்பர் 07இ 2025இ ஞாயிற்க்குகிழமை பூர்ணிமா ஷ்ராத்தா பௌர்ணமி செல்வம் பெருகும் (தனலாபம்)

செப்டம்பர் 8 2025 பிரதிபதா பிரதமை: ஷ்ரத்தா திங்கட்கிழமை வாரிசு வளர்ச்சி (வம்ச விருத்தி)

செப்டம்பர் 9 2025 த்விதியஷ்ரத்தா செவ்வாய்கிழமை திருப்திகரமான இல்வாழ்க்கை (வரன்) அமையும்

செப்டம்பர் 10 2025 திரிதியா ஷ்ரத்தா புதன்கிழமை ரேவதி ஃஅஸ்வனி பகை விலகும் (எதிரிகள் தொல்லை நீங்கும்)

செப்டம்பர் 11 2025 சதுர்த்தி ஷ்ரத்தா வியாழக்கிழமை மகா பரணி பகை விலகும் (எதிரிகள் தொல்லை நீங்கும்)

விசுவாசுநாமஸம்வத்ஸரேஇதக்ஷிணாயணேவர்ஷ ருதௌ கன்யா மாஸே க்ருஷ்ண பக்ஷே சதுர்த்தியாம் புண்யதிதௌஇப்ருகு வாஸர பரணீ நக்ஷத்ர யுக்தாயாம் அஸ்யாம் சதுர்த்தியாம் புண்யகாலேஇ பித்ருவ்யஇ மாதுலாதி வர்க்கத்வய ஸர்வேஷாம் ஸகருஸ்ய காருண்ய பித்ருணாம் அக்ஷய்ய த்ருப்தியர்த்தம்இ ஸக்ருன் மஹாளய ஸ்ராத்தம் தில தர்ப்பண ரூபேண அத்ய கரிஷ்யே.

செப்டம்பர் 12 2025 பஞ்சமி ஷ்ரத்தா வெள்ளிக்கிழமை பகை விலகும் (எதிரிகள் தொல்லை நீங்கும்)

செப்டம்பர் 13 ச 2025 ஷஷ்டி ஷ்ரத்தா சனி கிழமை அதிதி விரும்பிய பொருள் சேரும் (ஸம்பத்து விருத்தி)

செப்டம்பர் 13 2025 சப்தமி ஷ்ரத்தா சனி கிழமை தெய்வீகத் தன்மை ஓங்கும் (மற்றவர் மதிப்பர்)

செப்டம்பர் 14 2025 அஷ்டமி ஷ்ராத்தா ஞாயிறு கிழமை தெய்வீகத் தன்மை ஓங்கும் (மற்றவர் மதிப்பர்)

செப்டம்பர் 15 2025 நவமி ஷ்ரத்தா திங்கள்கிழமை சப்தமி வியாதிபாதம் மேலுலகோர் ஆசி

செப்டம்பர்16 2025 தசமி ஷ்ரத்தா செவ்வாய் கிழமை நல்லறிவு வளரும்

செப்டம்பர் 17 2025 ஏகாதசி ஷ்ராத்தா புதன் கிழமை ஏழுபிறவிக்கும் நல்ல வாழ்க்கைத் துணை

செப்டம்பர் 18 2025 துவாதசி ஷ்ரத்தா வியாழக் கிழமை ஏழுபிறவிக்கும் நல்ல வாழ்க்கைத் துணை

செப்டம்பர் 19 2025 த்ரயோதசி ஷ்ரத்தா மகம் ஃபூரம் வெள்ளி க்கிழமை மூதாதையர்இ ரிஷிகள்இ தேவர்களின் ஆசி கிட்டும் நல்ல குழந்தைகள்இ தங்கம்இ வைர ஆபரணங்கள் சேரும் கால்நடைச் செல்வம்இ நீண்ட ஆயுள் கிட்டும்

செப்டம்பர் 20 2025 சதுர்த்தசிஷ்ராத்தா சனிக்கிழமை வேதவித்யைஇ கல்விஇ கலைகளில் சிறக்கலாம்

## மஹாளய அமாவாசை அன்று பஞ்சாங்கம்

செப்டம்பர் 21 2025 சர்வபித்ரு அமாவாசை ஞாயிறு கிழமை மஹாளய அமாவாஸ்யை தர்பனம்: விசுவாசு நாம ஸம்வத்ஸரேஇ தக்ஷிணாயணே வர்ஷ ருதௌ கன்யா மாஸே க்ருஷ்ண பக்ஷே அமாவாஸ்யாயாம் புண்யதிதௌஇ ஸௌம்ய வாஸ பூரம்ஃஉத்திரம் நக்ஷத்ர யுக்தாயாம்இ அஸ்யாம் அமாவாஸ்யாயாம் புண்யகாலேஇ தர் ஸ்ராத்தம் தில தர்ப்பண ரூபேண அத்ய கரிஷ்யே.

## மஹாளய பக்ஷ தர்ப்பணம்

தர்ப்பணம்என்றால்போனவர்களுக்குதிருப்தியையும் நிறைவையும் தருவதாகும். அவர்களை திருப்திப்படுத்தி மேலும் நகர்த்தச் செல்ல சிராத்தம் இது செய்யப்படுகிறது. மூதாதையரின் இறப்பு நேரம்...... தேதி.......மற்றும் இயல்பைப் பொருட்படுத்தாமல் ஒருவர் தனது மூதாதையருக்கு கடமையை நிறைவேற்றும் நாள் இது. இது ஒரு வகை பார்வண சிரார்த்தம். இந்த நாளில் சிரார்த்தம்இ தர்ப்பணம் செய்யப்படுகிறது.

## மஹாளய அமாவாஸ்யை தர்பனம் மந்திரம்:

விசுவாசு நாம ஸம்வத்ஸரேஇ தக்ஷிணாயனே வர்ஷ ருதௌ கன்யா மாஸே க்ருஷ்ண பக்ஷே அமாவாஸ்யாயாம் புண்யதிதௌஇ ஸௌம்யவாஸரஇ பூரம்ஃஉத்திரம் நக்ஷத்ர யுக்தாயாம்இ அஸ்யாம் அமாவாஸ்யாயாம் புண்யகாலே தர் ஸ்ராத்தம் தில தர்ப்பண ரூபேண அத்ய கரிஷ்யே.

சுவதா நமஸ் தர்பயாமி,

சுவதா நமஸ் தர்பயாமி,

சுவதா நமஸ் தர்பயாமி

செப்டம்பர் 22 2025 பிரதிபதா பிரதமை: ஷ்ரத்தா திங்கட்கிழமை வாரிசு வளர்ச்சி (வம்ச விருத்தி)

## செயல்முறைகள்

ஸ்ரார்த்தம் நான்கு படிகளில் செய்யப்படுகிறது:

1. விஸ்வதேவ ஸ்தபனா – இது ஒரு தொழில்முறை பூசாரியைக் கலந்தாலோசிப்பது மற்றும் சடங்கைச் செய்வதற்குத் தேவையான மற்ற அனைத்து பொருட்களையும் சேகரிக்கும் செயல்முறையைக் குறிப்பிடுகிறது.

2. பிண்டம் – அரிசிஇ பார்லிஇ பசும்பால்இ தேன்இ நெய் மற்றும் சர்க்கரையால் ஆன ஆத்மாக்களுக்கு ஒரு வட்ட வடிவ பந்தில் உணவு வழங்கப்படுகிறது.

3. தர்ப்பன் – எள்இ பார்லிஇ தர்பை புல் மற்றும் வெள்ளை மாவு ஆகியவற்றுடன் தர்பனம் தண்ணீரை வழங்கி வருகிறது.

4. பிராமணர்களுக்கு உணவளித்தல் – இறுதியாகஇ பிராமணர்களுக்கு நன்றி உணவாக உணவு வழங்கப்படுகிறது.

## சிரார்த்தம் கொண்டாட்டம்

சர்வபித்ரு அமாவாசை நாளில் முடிவடையும் இரண்டு வாரங்களுக்கு நீட்டிக்கப்படுகிறது. இறுதி நாள் பிரசாதங்களுக்கு மிகவும் உகந்ததாகத் தெரிகிறது.

புரோஹித் முன்னிலையில் நிகழ்த்தப்படும் சிரார்த்தம் விழா சிறந்தது.

## சிரார்த்தத் தில் என்ன தானம் செய்ய வேண்டும்

சிரார்த்தம் பூஜையில் சுப பொருட்களை தானம் செய்வது பித்ரு தோஷத்திலிருந்து விடுபட உதவுகிறது. புராண நம்பிக்கைகள் மற்றும் விருப்பங்களின்படி ஒவ்வொரு பொருளுக்கும் அதன் சொந்த முக்கியத்துவம் உள்ளது.

வெல்லம் – இது வறுமையை எதிர்த்துப் போராட உதவுகிறது மற்றும் செல்வம் மற்றும் மகிழ்ச்சியுடன் ஆசீர்வதிக்கிறது.

நிலம் – ஒரு முனிவருக்கு நிலத்தை வழங்குவது உங்களுக்கு நிதி ரீதியாக வளர உதவுகிறது.

தங்கம் – இது வீட்டில் உள்ள ஒற்றுமையை குறைக்கிறது மற்றும் குடும்ப உறுப்பினர்களிடையே அமைதியான உறவை ஏற்படுத்த உதவுகிறது.

மாடு – மற்றவர்களுக்குப் பரிசாகப் பசுவை கொடுப்பதுஇ பெயர்இ புகழ் மற்றும் அனைத்து வார்த்தைகளான இன்பங்களையும் கொடுத்து உங்களுக்கு உதவுகிறதுஇ ஏனெனில் இது யாராலும் செய்யப்படக்கூடிய தூய்மையான தானம்.

உணவு தானியங்கள் – இது செழிப்பை அளிக்கிறது.

நெய் – முனிவருக்கு நெய்யை வழங்குவது வாழ்க்கையின் அனைத்து கண்ணோட்டங்களிலும் வளர உதவுகிறது.

உப்பு – உப்பு நம் முன்னோர்களின் ஆத்மாவை சமாதானப்படுத்துகிறதுஇ இதனால் அவர்கள் நமக்கு வரங்களை அளிக்கிறார்கள்.

ஆடைகள் – எப்போதும் செழிப்பு மற்றும் மன அமைதியுடன் ஆசீர்வதிக்கும் முனிவர்களுக்கு ஒரு ஜோடி ஆடைகள் பரிசாக வழங்கப்படுகின்றன.

வெள்ளி – வெள்ளியை வழங்குவது நம் முன்னோர்களின் ஆன்மாவை அமைதிப்படுத்தி வலியிலிருந்து நிவாரணம் அளிக்கிறது.

எள் விதைகள் – எள் விதைகளை வழங்குவது எந்தவிதமான ஆபத்துகளிலிருந்தும் நம்மை பாதுகாக்கிறது.

## மஹாளயபக்ஷம் தர்ப்பணம் என்று மூன்று வழிகளில் செய்யலாம்.

1) பார்வணம் என்பது ஆறு ப்ராஹ்மணர்களை ( பித்ருக்களாக) வரித்துஇ தந்தைஇ தாய்இ தாத்தாஇ பாட்டி முதலியவர்களுக்கு ஹோமம் செய்துஇ ப்ராம்ஹணர்களுக்கு சாப்பாடு போடுவது இ

2) ஹிரண்யம் என்பது அரிசி வாழைக்காய் முதலியவைகளை தந்து தர்ப்பணம் செய்வதுஇ

3) தர்ப்பணம் என்பது தானாகவே அமாவசைபோல் தர்ப்பணமாகச் செய்வது.

இவற்றில் ஏதாவது ஒருவிதத்தில் கட்டாயம் தனது பித்ருக்க ளுக்குச்செய்து கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.ஏதாவது ஒரு நாள் மட்டும் மஹாளயம் செய்பவர்கள்

1.தேவகடன்,

2.பித்ருகடன்,

3.ரிஷிகடன்,

ஒவ்வொரு மனிதனும்இ தேவகடன் நிறைவேற்ற வேண்டும். முறையான இறைவழிபாடுஇ குலதெய்வ வழிபாடு ஆகியவற்றைச் செய்வதன் மூலம்இ தேவகடனிலிருந்தும் நிவர்த்தி அடையலாம்.

பித்ருகடன் இ தர்ப்பணம் இ சிரார்த்தம் முதலியவற்றைத் தக்க காலங்களில் செய்வதன் மூலம் பித்ருகடனிலிருந்தும்நிவர்த்தி அடையலாம்.

ரிஷிகடன் முனிவர்கள் அருளிய உயர்ந்த படைப்புகளைபாராயணம்செய்துஉபாசிப்பதன்மூலமும்இ குருமார்களையும் ரிஷிகளையும் ஆராதித்தல்இ வீடு தேடி வரும் சன்யாசிகளுக்கு உணவளித்தல்இ அவர்களுக்கு வேண்டுவனவற்றை அளித்தல் போன்றவற்றின் மூலமும்இ ரிஷிகடனிலிருந்தும் நிவர்த்தி அடையலாம்.

## கிடைத்தற்கரியது மஹாளயபக்ஷம் புண்ணிய காலம்.

முதன் முதலில் பிரபஞ்சத்தில் தோன்றிய ஆதிமூலச் சூரிய கிரகமும்இ ஆதிமூலச் சந்திர கிரகமும் இணைகின்ற கிரகமண்டல சங்கமத்தில் தோன்றுவதே மஹாளயபக்ஷபூஷித லோகமாகும்

இங்குதான்மஹாளயபக்ஷத்தைபெருந்திருவிழாவாக தேவர்களும் பித்ருக்களும் கொண்டாடுகிறார்கள். அதாவதுஇ நமது மூதாதை யர்களது பித்ரு லோகங்களில் கொண்டாடப்படுகின்ற பிரம்மோற்சவமே மஹாளயபக்ஷம் மாகும்.

பூலோகத்தில் நாம் அளிக்கின்ற தர்ப்பணத்தில் எழுகின்றதர்ப்பணநீரைக்கொண்டுஇபித்ருலோகங்கள் பலவற்றிலும்இ பித்ருக்களும் பித்ரு கணங்களும் பித்ரு பத்தினிகளும் கலச பூஜை செய்துஇ அளப்பரிய ஆசீர்வாதப் பலன்களைப் பெறுகின்றனர்.

நமது மூதாதையர்களான பித்ருக்கள் தாம் நினைத்தபோதெல்லாம் பூலோகத் திற்கு வர இயலாது. ஆனால்அமாவாசைஇ மாதப்பிறப்புஇ இறந்த அவர்கள் திதி மற்றும் மஹாளயபட்ச தினங்களில் தான் அவர்கள் பூலோகத்திற்கு வர அனுமதிக்கப்படுகிறார்கள். எனவே அவர்கள் சூட்சும தேகத்துடன் பூலோகத்திற்கு வருகின்ற நாட்களில் நாம் பித்ரு தர்ப்பண பூஜைகளை நிறைவேற்றிடஇ அவர்களும் அதை இங்கு நேரடியாகப் பெற்று ஆசியளிக் கின்றனர்.

## பொதுவாக அனைத்து அமாவாசை திதிகளிலும்

ஸ்ரீ அக்னி பகவானின் பத்தினியான ஸ்வதா தேவியானவள்இ நாம் இடுகின்ற எள்ளையும் நீரையும் வாங்கி வானத்தில் எங்கெங்கோ உள்ள நீத்தார் உலகங்களுக்கு எடுத்துச் செல்கிறாள். ஆனால்இ மஹாளய பட்ச அமாவாசையில் எல்லா மூதாதையர்களும் சூரிய– சந்திர உலகிற்கு வந்துபோவதால் ஸ்வதா தேவியால் அனைத்து உறவினர்களையும் அங்கு சந்திக்க முடிகிறது. எனவே மஹாளய பட்ச அமாவாசையில் நாம் சமர்ப்பிக்கும் எள்இ நீர் ஆகியவற்றை இறந்த நமது உறவினர்களி டையே உடனடியாக அவள் சேர்த்துவிடுகி றாள்.

இறந்துபோன மூதாதையர்களின் நினைவாக நாம்

காலைக்கதிர்
Kalaikkathir

# மஹாளய பக்ஷம்......

8ம் பக்கத் தொடர்ச்சி..........

அளிக்கும் உணவானதுஇ (இந்த மஹாளயபக்ஷம் காலத்தில்) உடனே அவர்களைச் சென்று அடைவதாய் ஐதீகம்.

என் அருமையான தகப்பன் கடினமாக உழைத்துஇ சிக்கனமாக வாழ்ந்துஇ என்னைப் படிக்க வைத்துஇ நல்ல வேலையில் கொண்டுபோய் சேர்த்துஇ நான் உயர்வதைப் பார்த்து மகிழ்ந்துஇ எனக்குத் திருமணம் செய்து வைத்துஇ பேரப்பிள்ளைகளைக் கொஞ்சி வாழ்க்கையை முழுவதுமாக அனுபவித்துவிட்டுஇ என்னையும் என் குடும்பத்தையும் ஆசிர்வதித்துவிட்டுப் போனாரே... அதற்காக நன்றி என்று தெரிவிப்பது நல்லதல்லவா?

அந்தத் தாய் இல்லையெனில் நான் இல்லை. தன் உதரத்தில் சுமந்தவள் என்பதால் மட்டுமல்லஇ ஒவ்வொரு கணமும் என் நினைவாகவே வாழ்ந்துஇ எனக்காகவே தன் வாழ்க்கை வசதிகளை சுருக்கிக்கொண்டுஇ என்னுடைய வளர்ச்சியையும் கம்பீரத்தையும் பார்த்துப் பூரித்து ‘அது என் பிள்ளை‘ என்று பலபேர் முன்னால் கர்வமாகச் சொல்லிஇ அந்தக் கர்வத்தின் காரணமாகவே இன்னும் அதிக உதவிகள் செய்துஇ உங்கள் மனைவிக்கு வாழ்வின் மேன்மைகளை உணர்த்திஇ உங்கள் பேரப் பிள்ளைகளுக்கு நல்ல விஷயங்கள் சொல்லிஇ சட்டென்று ஒருநாள் போய் வருகிறேன் என்று சொன்னதுபோல மறைந்து போனாளே... அவளுக்கு மனமார்ந்த நன்றியாக தர்பனம் செய்வதுதான் எத்தனை சுகம்! நெஞ்சார்ந்த நன்றி என்று தாய் தந்தையாரை நினைத்துக் கொண்டுவிட்டால் அந்த நீத்தார் கடனில் எவ்வளவு ஆழமாகஇ உணர்வுப்பூர்வமாக ஈடுபட முடியும்!

‘அன்புதாயேஇதந்தையேஇநீங்கள்வெளிச்சத்திற்கு வாருங்கள் உங்கள் பசி தீர்க்க இந்த அரிசி மாவினால் செய்த பிண்டத்தை சமர்ப்பிக்கிறேன். உங்கள் தாகம் தீர்க்க எள் நீர் வார்க்கிறேன். உங்களை கைகூப்பி இந்த இடத்தில் இந்த இந்த மஹாளயபக்ஷத்தில்இ என் அருகே வந்து நான் கொடுக்கின்ற இந்த சிறிய பொருட்களை காணிக்கையாக ஏற்று சந்தோஷமடைய வேண்டும். எங்களையும் ஆசீர்வதிக்க வேண்டுகிறேண் இங்கே உட்கார்ந்து இத்தனை கம்பீரமாக இதைச் செய்ய முடிகிறதென்றால் அது நீங்கள் என்னை நன்கு வளர்த்ததுதான் காரணம்‘ என்று நெகிழ்ந்து சொல்லுங்கள்.

அரிசி மாவினால் செய்த பிண்டத்தை காக்கை தின்று விட்டது. ஐயர் தட்சணையை வாங்கிக்கொண்டு போய்விட்டார். நீரில் இறைத்த ஜலம்இ நீரோடு கலந்துவிட்டது. நீங்கள் மட்டும் குளக்கரையில் அமர்ந்து நீரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். மனம் மட்டும் அந்த மஹாளயபக்ஷத்தில்இ அம்மாவையும்இ அப்பாவையும்இ மற்ற முன்னோர்களையும் நினைத்துக் கொள்ளும். உள்ளுக்குள் கை கூப்பும். கண்களின் ஓரம் நீர் திரளும்.

பூலோகத்தில் நாம் அளிக்கின்ற தர்ப்பணத்தில் எழுகின்ற தர்ப்பண நீரைக் கொண்டுஇ பித்ரு லோகங்கள் பலவற்றிலும்இ பித்ருக்களும் பித்ரு கணங்களும் பித்ரு பத்தினிகளும் கலச பூஜை செய்துஇ அளப்பரிய ஆசீர்வாதப் பலன்களைப் பெறுகின்றனர்

### எவ்விதம் பித்ருக்கள் வருகிறார்கள்?

மஹாளயபக்ஷம் ஆரம்ப தினத்தன்று பித்ரு தேவதைகள்இசூரியபகவான்இதர்மராஜன்ஆகியோரின் அனுமதி பெற்று பித்ருக்கள்இ ஸ்வர்ண (தங்கம்) மயமான விமானங்களில் ஏறி நம்மிடம் வருகிறார்கள். இந்த விமானங்கள் சூரியனின் ஒளிக்கற்றைகள் மூலம் பறந்து வருகின்றன. இவ்விதம் பித்ருக்கள் பூமியில் இறங்கும்போது அவர்களை தேவர்களின் உலகிலுள்ள மகரிஷிகள் ஆசீர்வதிக்கின்றனர்.

தேவர்கள் வணங்குகின்றனர். பித்ருக்கள் பரம பவித்திரமானவர்கள். தங்களது ஜீவித காலத்தில் செய்துள்ள புண்ணிய செயல்களால் புடமிட்ட தங்கம்போல் ஒளிபொருந்தியவர்களாகப் பித்ருக்கள் பிரகாசிக்கிறார்கள் எனப் புராதன நூல்கள் போற்றிப் புகழ்கின்றன.

மீண்டும்இ தங்கள் குழந்தைகளைப் பார்க்கும் வாய்ப்புக்கிட்டியதால்இ அவர்கள் பேருவகை அடைவதாக ‘கருடபுராணம்‘ கூறுகிறது. அவர்கள் நம்மிடையே வந்து நம்முடன் தங்கும் இந்தப் பதினைந்து புனிதநாட்களும் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்இ எப்படி பேசவேண்டும்இ வீட்டை எப்படிப் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதை ‘வைத்யநாத தீக்ஷிதம்‘ என்ற வடமொழி நூல் அதிஅற்புதமாக நமது நன்மைக்காக விளக்கியுள்ளது.

இந்தஇ பதினைந்து நாட்களிலும்இ ஒவ்வொருவரும் நமது வீட்டை மிகவும் சுத்தமாக வைத்துக் கொள்வது அவசியம். குடும்பத்தில் ஒருவருக்கொருவர் சண்டை போடுவதுஇ தகாத சொற்களைப் பேசுவதுஇ திரைப்படம் பார்ப்பதுஇ ஆபாசமான படங்களைப் பார்த்தல்இ பாலியலைத் தூண்டும் புத்தகங்கள்இ சஞ்சிகைகள்இ பத்திரிகைகள் ஆகியவற்றைப் படித்தல்இ புலால் உண்ணுதல்இ கள்இ மது குடித்தல் ஆகியவற்றைக் கண்டிப்பாகத் தவிர்த்தல் வேண்டும்.

### பித்ருக்களை வழியனுப்பி வைத்தல்!

இவ்விதம் மஹாளயபக்ஷம் பதினைந்து நாட்களும் பூஜித்த பிறகுஇ மஹாளய அமாவாசை அன்று விசேஷ பூஜை செய்து நம்மை ஒரு பொருட்டாகக் கருதி இப்பூவுலகிற்கு எழுந்தருளி நம்முடன் இந்தப் பதினைந்து நாட்களும் தங்கிஇ நமக்கு அருள்புரிந்ததற்காக அவர்களுக்கு நன்றி கூறிஇ அவர்களுக்குப் பாதபூஜை செய்து (பெரியவர் ஒருவர் மூலம்)இ நன்றி கூறி அம்மகாபுருஷர்களையும்இ அவர்களது தேவியரையும் (மனைவி) வழியனுப்பி வைக்கிறோம். அவர்களும் தாங்கள் வந்த தங்கமயமான விமானத்திலேயே சூரியனின் கிரணங்கள் வழியாக தங்களது நல்லுலகிற்குச் செல்கிறார்கள். ஆதலால்இ மஹாளயபக்ஷம்என்ற மகத்தான புண்ணிய காலம் நமக்கு அளவற்ற நற்பலன்களைத் தேடித் தருகிறது.

### தர்ப்பணம்

உடல் நிலை சரியில்லாதவர்கள் தர்ப்பணத்தை இல்லத்திலும் அளிக்கலாம். ஆனால் தீர்த்தத் தலங்களுக்கு சென்று தர்ப்பணத்தை எள்இ நீர் தெளித்துச் செய்தால் பலன் பல மடங்கு கூடும் என்பது ஐதீகம்.

தர்ப்பணங்களில் எள் பித்ருக்களுக்கு உரித்தானதாக இருக்கிறது. இந்தத் தர்ப்பணத்தால் பித்ருக்களுக்கு பசியும்இ தாகமும் தீரும் என்பது சாஸ்திரம். இதனால் வாய் வாழ்த்தாவிட்டாலும் வயிறு வாழ்த்தும் என்பது ஐதீகம்.

### செய்ய வேண்டியவை

இல்லத்தில் உள்ள பெரியவர்கள் தெரிந்தோஇ தெரியாமலோ பசியால் வாடிவிடாமல் காக்க வேண்டும். இருக்கும்போதும்இ இறந்த பின்னும் முன்னோரைக் காப்போம்இ வழிபடுவோம்.

தர்ப்பணத்திற்குப் பின்னரே இல்லத்துப் பூஜைகள் செய்ய வேண்டும்.தர்ப்பணம் செய்ய வேண்டிய இம்மாதத்தில் திவச நாள் முடிந்த பின்னரே இல்லத்து மங்களநிகழ்ச்சிகளைசெய்யவேண்டும்.ஒவ்வொருதமிழ் மாதப்பிறப்பன்றும் பித்ருக்களை வணங்கிச் சூரியனை வழிபடலாம்.ஆண்டொன்றுக்குத் தொண்ணூற்றாறு தர்ப்பணங்கள் செய்ய வேண்டும் என்ற கணக்கொன்று உண்டு.மகா புண்ணியத்தை அளிக்கக்கூடியது தாய்இ தந்தையருக்கு இடைவிடாமல் செய்யும் திவசமே.

### தவிர்க்க வேண்டியவை

கர்த்தா என்ற தர்ப்பணம் செய்பவர் தனது பெயரை இந்தக் குறிப்பிட்ட காலத்திற்கு எந்தப் பூஜையிலும் சங்கல்பம் செய்துகொள்ளக் கூடாது.

ஆகஇ அதியற்புதமான– தெய்வீக ஆற்றல்களைக் கொண்ட நமது பித்ருக்களுக்குத் தர்ப்பணங்கள்இ திவசங்கள்இ படையல்களை முறையாக அளித்துஇ பல்லாயிரக்கணக்கான கர்ம வினைகளுக்குப்பரிகாரம் தரும் மஹாளய பட்ச தர்ப்பண தான–

**தர்மங்களை நிறைவேற்றி நல்வழி காணலாம்..!**

வசிஷ்டமகரிஷிஇ தசரதர்இ யயாதிஇ துஷ்யந்தன்இ நளன்இ அரிச்சந்திரன்இ கார்த்தவீர்யார்சுனன்இ ஸ்ரீராமர்இ தர்மர் முதலானோர் மஹாளயம் செய்து பெரும் பேறு பெற்றனர் என்கின்றன புராணங்கள்.

மும்மூர்த்தி உருவில் உலகுக்கே குருவாக வந்த ஸ்ரீதத்தாத்ரேயரும் வேதாளம் பற்றிக்கொண்ட துராசாரன் என்ற அந்தணனுக்கு சாப விமோசனமாக புரட்டாசி மாதம்இ கிருஷ்ண பட்சத்தில் மஹாளயம் செய்யுமாறு வழிகூறினார்.

மஹா–கல்யாணம்இ ஆலயம் –இருப்பிடம் என்ற பொருளில் கல்யாணத்திற்கு இருப்பிடமாயிருப்பதால் மஹாளயம் என்று பெயர் வந்ததாகவும் கருதலாம்.

திருமணப் பிராப்தி அதாவது கல்யாணத்தை விரும்புகிற மனிதன் மஹாளயம் செய்ய வேண்டும்.

‘‘மஹாளயம் செய்யாதவனுக்கு மங்களம் உண்டாகாது‘‘ என்பது பழமொழி.

இனம்புரியாத நோய்கள்இ உடற்குறையுடன் பிறக்கும் குழந்தைகள்இ குடும்பத்தில் தள்ளிப் போகும் திருமணங்கள்இ செய்யும் காரியங்களில் தடைகள் – குழப்பம்இ பெற்றோர்களை அவர்கள் வாழ்நாளில் சரிவர கவனிக்காமை போன்ற குறைகளுக்கு ஒரு சிறந்தஇ எளிய பரிகாரம் இந்த மஹாளய பட்ச நாட்களில் பித்ரு தேவதைகளை பூஜை செய்வதுதான்.

இந்துக்களுக்கு தமது முன்னோரது ஆசி பெற அமாவாசைகள் அதிலும் குறிப்பிட்ட சில அமாவாசைகள்இ வருஷதிதிஇ மகாளயபட்சநாட்கள் மிகவும் உகந்தவை.

பிதுர்தர்ப்பணத்தை பிள்ளைகள் அவசியம் பெற்றோருக்காகச் செய்யவேண்டும். தர்ப்பணம் என்றால் திருப்தியுடன் செய்வது என்றும்இ சிராார்த்தம் என்றால் சிரத்தையுடன் செய்வது என்று அர்த்தம்.

மஹாளயபக்ஷ அமாவாசையில்இ சீக்கிரம் எழுந்து புனித நதிகளில்இ கடலில் அல்லது அருகிலுள்ள ஏரி குளம் இவற்றில் நீராடுவார்கள். இந்த நாளில் உண்ணாவிரதம் இருந்து அமாவாசை நோன்பையும் கடைப்பிடிக்கின்றனர்.

ஸ்ரார்த சடங்குகளை செய்வதுஇ எள் தர்ப்பணம் கொடுப்பது மிகவும் புனிதமான செயல் என்று நம்பப்படுகிறது.

பிந்திய மாத காலத்தில் தங்கள் முன்னோர்களை வணங்க முடியாதவர்கள் இந்த நாளில் இருந்தாவதுஇ இவற்றினை செய்தால் நலம் ஆகும். அன்று அந்தணர்கள்இ முதியவர்கள்இ ஏழைகள் என்பவருக்கு தானம் தர்மம் செய்வது பல தலைமுறைக்கும் பயன் அளிக்கும் என்று நம்பப்படுகிறது.

தடைபட்ட திருமணம்இ வேலையின்மைஇ நோய்நொடிகள்இ மன வருத்தம் ஆகியவை விலகி சந்தோஷமும்இ மனநிறைவும் நம் வாழ்வில் கிடைக்கப்பெறும்.

### அன்று நீர்நிலையில் பிதுர்பூஜைகள்

மேற்கொள்ளப்பட்டபின் வீட்டிற்கு வந்ததும்இ பூஜையறையில் (முன்னோர்களின் படங்கள் இருந்தால் அந்தப்படங்கள் முன்னிலையில்) அவர்களை நினைத்து தலைவாழை இலையில் பலவிதமான காய்கறிகளை சமைத்துஇ வடைஇ பாயசத்துடன் பெரிய அளவில் படையல்போட்டு வழிபடவேண்டும். அவரவர் குல வழக்கப்படி இந்தப் பூஜையை மேற்கொள்ளவேண்டும் என்பது விதியாகும். இதனால் முன்னோர்களின் ஆசிகிட்டுவதுடன்இ வீட்டில் தீய சக்தி இருந்தால் அது விலகியோடும். இல்லத்தில் உள்ளவர் களும் சௌபாக்கியங்களுடன் வாழ்வர்.

ஆகவேஇ அவர்களுக்குரிய திதிஇ தர்ப்பணம்இ திவசம் ஆகியவற்றை முறையாக செய்வது ஒன்றே அவர்களுக்கு நிச்சயமாக விடுதலை அளிக்கும். அதனால் இந்த அமாவாசை அன்று தர்ப்பணம் செய்துஇ திதிஇதிவசம் செய்து முன்னோர்களின் ஆசிர்வாதத்தைப் பெற்று இன்பமாக வாழவேண்டும்.

பிதுர் தோஷம் நீக்கும் மஹாளயபக்ஷ அமாவாசை பிதுர்களாகிய மறைந்த நம் முன்னோர்கள் பூஜைக்கு ஏற்றதாக போற்றப்படுகின்றது. அமாவாசை அன்று நீர்நிலைகளிலும்இ சில கோவில்களிலும் மறைந்த மூதாதையர்களுக்கும் உறவினர்களுக்கும் முறையாக பூஜை செய்து வழிபட்டால்இ எடுத்த காரியங்கள் நிறைவேறும். பிதுர்தோஷம் இருந்தால் நீங்கும். இடையூறு இல்லாமல் சுகமாக வாழலாம் என்பது நம்பிக்கை.

இந்த பித்ரு பூஜையை ஆறுஇ நதிக்கரைகளிலோஇ குளக் கரைகளிலோஇ முடியாவிட்டால் இல்லத்தில் இருந்தபடியோ செய்யலாம்.

(ஆதாரம் : ஸ்ரீ பூர்வபுண்ணிய நிர்ணயசாரம்இ ஸ்ரீ கருடபுராணம்இ ஸ்ரீ பவிஷ்ய புராணம்இ ஸ்ரீ மத் மகாபாரதம்இ ஸ்ரீ விஷ்ணு புராணம்இ ஸ்ரீ அகத்தியர் பூஜா விதானம்இ முதலிய நூல்கள்).

**சதாசிவம் சுப்புராயச்செட்டியார்**

# அரச ஊடக அதிகாரிகளுக்கு இந்தியாவில் சிறப்புப் பயிற்சி

அரச ஊடக அதிகாரிகளை கொண்ட 30 பேர் கொண்ட இலங்கை பிரதிநிதிகள் குழு, சிறப்பு பயிற்சித் திட்டத்தில் பங்கேற்பதற்காக 2025 ஒகஸ்ட் 17 முதல் 30 வரை இந்தியாவுக்குச் சென்றிருந்தது.

இந்துப் பிரதிநிதிகள் குழுவில் பிரதமரின் ஊடகப் பிரிவு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் அரச தகவல் திணைக்களம் , உட்பட மாவட்ட ஊடகப் பிரிவுகளின் பிரதிநிதிகள் உள்வாங்கப்பட்டிருந்தனர்.

இந்தத் திட்டம், 2025 ஏப்ரலில் இலங்கைக்கு வருகை தந்தபோது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கு அமையச் செயற்படுத்தப்பட்டது, இலங்கை நிபுணர்களுக்காக வருடாந்தம் 700 பயிற்சி இடங்களை வழங்குவதற்காக ஒழுங்கமைக்கப்பட்டது என்று கொழும்பிலுள்ள இந்திய உயராணையரகம் தெரிவித்துள்ளது.

இந்த இரண்டு வார கால பயிற்சித் திட்டம், இலங்கை அரச தகவல் திணைக்களத்தின் கோரிக்கைக்கு அமைய இந்திய ஆளும்தரப்பால் ஒழுங்கமைக்கப்பட்டது. இது சுஷ்மா ஸ்வராஜ் வெளிநாட்டுச் சேவை நிறுவனம் , இந்திய வெகுசனத் தொடர்பு நிறுவனம் மற்றும் ஊடக தகவல் பணியகம் உள்ளிட்ட முன்னணி இந்திய நிறுவனங்களால் நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சித் திட்டத்தில் பொது இராஜதந்திரம், பத்திரிகை உறவுகள், டிஜிட்டல் ஊடக நடைமுறைகள் மற்றும் ஊடக முகாமைத்துவம் ஆகியவை தொடர்பிலான கலந்துரையாடல் அமர்வுகள் இடம்பெற்றன.

அனுபவக் கற்றல் திட்டத்தின் ஒரு பகுதியாக, இந்துப் பிரதிநிதிகள் குழு கலிங்கா தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் , ஒடிசா மாநில பேரிடர் முகாமைத்துவ அதிகாரசபை மற்றும் கலிங்கா அரங்கம் உள்ளிட்ட முக்கிய நிறுவனங்களுக்கும் சென்றது. அவர்கள் ஒடிசாவின் முதலமைச்சரையும் சந்தித்தனர், அங்கு ஊடகம் மற்றும் பொதுத் தொடர்புகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

தொழில்முறைப் பயிற்சிக்கு அப்பால், இந்தத் திட்டம் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு, செயற்கை நுண்ணறிவு திறன் உட்பட தொழில்நுட்ப முன்னேற்றங்கள், மற்றும் அதன் துடிப்பான சுற்றுலாத் துறை, இந்தியாவின் வளமான கலாசார பாரம்பரியம் மற்றும் அன்பான விருந்தோம்பலை அனுபவிப்பதற்கான வாய்ப்புகளையும் வழங்கியது.

இலங்கை அரச ஊடக அதிகாரிகளுக்கான சிறப்புப் பயிற்சித் திட்டம், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஊடகம் மற்றும் தொடர்பாடல் துறையில் நிபுணத்துவத்தை மேம்படுத்துவதற்கும், அறிவுப் பகிர்வு மற்றும் நிறுவன இணைப்புகளை மேம்படுத்துவதற்கும் மேலும்பங்களித்துள்ளதாகஇந்தியஉயராணையரகம் மேலும் தெரிவித்துள்ளது.

# நாடாளுமன்றத்தை சுற்றி வளைக்க வந்தோர் கோட் சூட் போட்டு கௌரவம் பேசுகின்றனர்

## ஆளும்தரப்பினரைக் கடுமையாகச் சாடிய ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.

போராட்டக் காலத்தில் நாடாளுமன்றத்தை சுற்றி வளைக்க வந்தவர்கள் தற்போது டை, கோட் அணிந்துக்கொண்டு நாடாளுமன்ற கௌரவம் மற்றும் ஜனநாயகம் பற்றி பேசுகிறார்கள். இவர்களுக்கு வெட்கமென்பது கிடையாது. இறந்து பிறந்தவர்களை போன்றே பேசுகிறார்கள். ஜேவிபியை மக்கள் கண்டுக்கொள்ள போவதில்லை. தேசிய மக்கள் சக்தியினருக்கு வீதிக்கு இறங்க முடியாத நிலை ஏற்படுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தேசிய கணக்காய்வு (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நேபாளம் நாட்டின் இன்றைய நிலையை பாருங்கள் ஜே.வி.பியினர் கூச்சலிடுவதை மக்கள் கண்டுகொள்ளப்போவதில்லை. ஆனால் தேசிய மக்கள் சக்தியினருக்கு வீதியில் இறங்கிப் போக முடியாதவாறான நிலைமை உருவாகும் என்பதை மாத்திரம் குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

அரச செலவுகளை குறைத்துள்ளோம், அமைச்சுக்கான சம்பளம்,நாடாளுமன்ற உறுப்பினருக்கான சம்பளம் இரண்டில் ஒன்றையே பெறுவோம் என்று குறிப்பிட்டீர்கள். சட்டமியற்றி முன்னாள் அரசுத் தலைவர்களை அரச உத்தியோகபூர்வ இல்லங்களில் இருந்து வெளியேற்றியுள்ளீர்கள். இவ்வாறான செயற்பாடுகளினால் மக்களுக்கு என்ன பயன் கிடைத்துள்ளது.

அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் அமைச்சுக்கான சம்பளத்தையும் பெறுகிறார்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சம்பளத்தையும் பெறுகிறார்கள். இதுதான் உண்மை பிரதி அமைச்சர் ஒருவரின் சம்பள விபரத்தை சபைக்கு சமர்ப்பிக்கிறேன். பெயர் விபரங்களை பகிரங்கப்படுத்த போவதில்லை ஏனெனில் அவர்களுக்கும் குடும்பம் உள்ளது. நாங்கள் உங்களை போன்று குறுகிய மனநிலையில் வைராக்கியத்துடன் செயற்பட போவதில்லை என்றார்.



# கிழக்கு முஸ்லிம்கள் பிரச்சினையை பேசினால் கண்டி எம்.பிக்கள் ஏன் அதை எதிர்க்கின்றனர்?

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. கேள்வி

நாடாளுமன்றத்தில் கிழக்கு மாகாண மக்களின் குறிப்பாக முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் பற்றி பேசும் போது கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அதனை எவ்வாறு பொய்யென்று குறிப்பிட முடியும்? ஆளும்தரப்புக்கு எதிராக எதிர்க்கட்சியினர் சேறு பூசத் தேவையில்லை. ஆளும் தரப்பினரின் கருத்துக்களே ஆளும்தரப்புக்கு சேறு பூசுவதாகவுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தேசிய கணக்காய்வு (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது:

கடந்த நாடாளுமன்ற அமரவின் போது திருகோணமலை மாவட்ட வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகங்களில் முஸ்லிம் தாதியர்கள் மற்றும் பெண் சேவையாளர்கள் கலாசார ஆடையுடன் சேவையில் ஈடுபட கூடாது என்று பிராந்திய சேவை பணிப்பாளர் அறிவித்திருந்ததை சபையில் சுட்டிக்காட்டினேன்.

இந்த விடயத்தை நான் குறிப்பிட்டதன் பின்னர் ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பஸ்மி சரிப் நான் பொய்யுரைப்பதாகவும், அவ்வாறு ஏதும் நடவடிக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.திருகோணமலை மாவட்ட சுகாதார திணைக்கள ஊழியர் சங்க உறுப்பினர்கள் பிராந்திய சேவை பணிப்பாளரின் தீர்மானம் தொடர்பில் எனது அலுவலகத்துக்கு வந்து முறைப்பாடளித்துள்ளார்கள். பாதிக்கப்பட்டவர்;கள் ஆதாரங்களை முன்வைத்துள்ளார்கள்.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள் பற்றி நாங்கள் குறிப்பிடும் போது கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அதனை எவ்வாறு பொய்,பிழை என்று குறிப்பிட முடியும். இன்று உங்களின்; மாவட்டங்களில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவற்றுக்கு உங்களின் அரசாங்கத்துடன் பேசி தீர்வுகளை பெற்றுக்கொடுங்கள் எமது மாகாணத்தின் பிரச்சினைகள் பற்றி நான் குறிப்பிட்ட விடயங்கள் பொய் என்பதை இந்த உறுப்பினர் நிரூபிக்க வேண்டும்.

பொதுமக்களுக்கு ஏதேனும் பாதிப்பு மற்றும் நெருக்கடி ஏற்பட்டால் அதற்கு தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும்.அதனை விடுத்து முன்வைக்கப்படும் விடயங்கள் பொய் என்று குறிப்பிட கூடாது.பிழை என்று குறிப்பிட்டால் அதற்கான நியாயத்தையும் குறிப்பிட வேண்டும்.இந்த உறுப்பினர் நாங்கள் அரசாங்கத்துக்கு சேறு பூசுவதாக குறிப்பிடுகிறார்.

முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான செயற்பாடுகளை சுட்டிக்காட்டும் போது ஆளும் தரப்பின் முஸ்லிம் உறுப்பினரே அதற்கு எதிராக பேசுகிறார்கள்.இவர்களே அரசாங்கத்துக்கு சேறுபூசுகிறார்கள். கடந்த காலங்களில் அனைத்து சிறந்த விடயங்களுக்கும் எதிர்ப்பு தெரிவித்த நீங்கள் இன்று சமூக வலைத்தளங்கள் பற்றி பேசுகின்றீர்கள். யூடியூபர்களில் எத்தனை பேர் ஊடக ஒருங்கிணைப்பாளராக இந்த ஆளும்தரப்பில் சம்பளம் பெறுகிறார்கள் என்பதைக் குறிப்பிட முடியுமா?

பல ஊடகங்கள் இந்த ஆளும்தர்புக்குச சார்பாகவே செயற்படுகின்றன. மக்கள் மிக தெளிவாகவுள்ளார்கள். தவறுகளை நிவர்திக் கொள்ளுங்கள்.திருகோணமலை முத்துநகர் விவசாயிகளுக்கு மக்கள் தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணமளிக்க வேண்டும் என்றார்.

## பாதாள உலக்கக் குழுத் தொடர்பு காரணமாக மல்லாவி இராணுவ அதிகாரி ஒருவர் கைது

இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களுக்கமைய கம்பஹா பகுதியில் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரும், மல்லாவி பாலைநகர் பகுதியில் இராணுவ அதிகாரி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். விசாரணைகள் தீவிரமான முறையில் முன்னெடுக்கப்படுகிறது.பாதாள குழுக்களுடன் தொடர்புடையஎவரும்தப்பித்துச்செல்லஇடமளிக்க முடியாது.வெளிநாடுகளில் பதுங்கியுள்ள பாதாள குழுக்களின் 72 உறுப்பினர்களை கைது செய்வதற்கு சிவப்பு அறிவிப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வில் சபை ஒத்திவைப்பு வேளையின் போது நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பில் ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பத்மகுமார முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் நாட்டை விட்டு வெளியேறும் போதும்இநாட்டுக்குள் வரும் போதும் அவர்களை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்வதற்கு விசேட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ள 556 பேரை தொடர்ச்சியாக கண்காணிப்பதற்கு விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நாட்டில் ஏதேனும் பகுதியில் குற்றச்செயல்கள் இடம்பெற்றால் துரிதரகமாக செயற்படுவதற்கு சகல பொலிஸ்நிலையங்களில்பொறுப்பதிகாரிகள்மற்றும் ஏனைய பாதுகாப்பு தரப்பினரை ஒன்றிணைந்து வட்சப் செயலி ஊடாக விசேட குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்புக்கள்இ சோதனை சாவடிகள் போடப்பட்டு வாகனங்கள் சோதிக்கப்படுகின்றன.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டு வெளிநாடுகளில் பதுங்கியுள்ளவர்களை கைது செய்வதற்கு இராஜதந்திர மட்டத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 72 பேருக்கு எதிராக சிவப்புஅறிவிப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாகவே அண்மையில் இந்தோனேசியாவில் பிரதான நிலை போதைப்பொருள் வர்த்தகர்கள் ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர்.அத்துடன் இதுவரையான காலப்பகுதியில் வெளிநாடுகளில் இருந்து 11 பேர் சிவப்பு பிடியாணை ஊடாக கைது செய்யப்பட்டு நாட்டுக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இதுவரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 105 ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளதுடன், இச்சம்பவங்களுடன் தொடர்புடைய 34 துப்பாக்கிதாரிகளும், ஒத்தாசை வழங்கியவர்கள் உட்பட 322 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.அத்துடன் டி56 ரக துப்பாக்கிகள் 58 உட்பட 1698 துப்பாக்கி மற்றும் ஏனைய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பாதாளகுழுக்களின் உறுப்பினர்கள் டுபாய், இத்தாலி, பிரான்ஸ், சுவிஸ்ர்லாந்து, கனடா, இந்தியா உள்ளிட்ட நாடுகளில் இரகசியமான முறையில் பதுங்கியுள்ளார்கள். இவர்களை கைது செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் பாதுகாப்பு, பாதுகாப்பு அமைச்சு, வெளிவிவகாரத்துறை அமைச்சு கூட்டாக இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஒழுங்கமைக்கப்பட்ட பாதாள குழுக்களுக்கும் கடந்தகால அமைச்சர்கள்,பிரதி அமைச்சர்கள் மற்றும் முன்னாள் அரசியல்வாதிகளுக்கும் இடையில் தொடர்புண்டு என்பது குற்றப்புலனாய்வு பிரிவின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுஅதற்குரியவிசாரணைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.கைது செய்யப்பட்டுள்ளவர்களிடம் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு அமைவாக உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களுக்கமைய கம்பஹா பகுதியில் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.அத்துடன் மல்லாவி பாலைநகர் பகுதியில் இராணுவ அதிகாரி ஒருவர் இன்று (நேற்று) கைது செய்யப்பட்டுள்ளார். விசாரணைகள் தீவிரமான முறையில் முன்னெடுக்கப்படுகிறது. பாதாள குழுக்களுடன் தொடர்புடைய எவரும் தப்பித்துச் செல்ல இடமளிக்க முடியாது என்றார்.

இதேவேளை, ஜகர்த அனகடில் வைத்து கைது செய்யப்பட்டு, நாட்டுக்கு அழைத்துவரப்பட்ட பாதாள உலக கும்பல் உறுப்பினர்களிடம் முன்னெடுக்கபப்டும் விசாரணைகள் தீவிரபப்டுத்தப்பட்டுள்ளன. அதன்படி, இந்த்தோனேஷியாவில் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட கெஹல்பத்தர பத்மேயுடன் தொடர்புகலை பேணியதாக கூறபட்டும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரையும், கொமாண்டோ சலித்தவுடன் தொடர்புகலை பேணி அவருக்கு துப்பாக்கி தோட்டாக்களை வழங்கியதாக கூறபட்டும் லெப்டினன் கேர்ணல் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

உப பொலிஸ் பரிசோதகரை குற்றப் புலனயவுத் திணைக்களத்தினரும், லெப்டினன் கேர்ணலை மேல் மாகாண வடக்கு குற்றத் தடுப்புப் பிரிவினரும் கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## எதிர்க்கட்சி எம்பிக்கள் நேற்று சபை நடுவே அமளி துமளி

### நடவடிக்கைகள் 10 நிமிடயங்களுக்கு ஒத்திவைப்பு

பாதுகாப்புப்பிரதிஅமைச்சர்அருணஜயசேகரவுக்குஎதிரானநம்பிக்கையில்லாப் பிரேரணையை நிராகரிப்பதற்குக் காரணமாக சபாநாயகர் எடுத்துக்கொண்ட சட்டமா அதிபரின் அறிக்கை மற்றும் நாடாளுமன்ற செயலாளரின் பணியாள் தொகுதியின் அறிக்கை என்பவற்றைச் சபைக்குச் சமர்ப்பிக்குமாறு தெரிவித்து எதிர்க் கட்சியினர் நேற்று நாடாளுமன்றத்தின் மத்தியில் நடத்திய போராட்டம் காரணமாக சபை அமர்வுகள் 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நேற்றுக் கூடியது. முதன்மை நடவடிக்கைகளைத் தொடர்ந்து தனிக் கூற்றை முன்வைத்து எதிர்க் கட்சிப் பிரதம கொறடா கயந்த கருணாதிலக்க உரையாற்றினார். எங்களால் முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தொர்பில் நீங்கள் எடுத்த முடிவை நேற்று அறிவித்தீர்கள். அதனடிப்படையில் சட்ட மா அதிபரின் அறிக்கை மற்றும் நாடாளுமன்ற பணியாட் தொகுதியினரின் அறிக்கை என்பவற்றை நாடா-ளுமன்றத்தில் அளிக்கை செய்யும்படி நாம் கோரியிருந்தோம்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிராகரிப்பதற்குத் தெரிவிக்கப்பட்ட காரணங்கள் தெளிவற்றவையாகும். இந்தச் சபையில் சபாநாயகர்கள் நம்பிக்கையில்லாப் பிரேணைகளை அனுமதித்த முறைகள் தொடர்பில் பல முன்மாதிரிகள் இருக்கின்றன. ஆனால் முதல் தடவையாக தற்போதைய சபாநாயகர் ஒருவரே நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை நிராகரித்துள்ளார்.

159 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஆளும்தரப்புக்கு ஏன் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை எதிர்கொள்ள முடியாமலுள்ளது? அதனால் சட்ட மா அதிபரின் அறிக்கை, மற்றும் நாடாளுமன்ற பணியாட் தொகுதியினரின் அறிக்கை என்பவற்றை நாடாளுமன்றத்தில் அளிக்கை செய்யுமாறு மீண்டும் வலியுறுத்துகின்றோம் - என்றார்.

இதனைத் தொடர்ந்து எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையின் நடுவே சென்று தமது கோரிக்கையை வலியுறுத்திக் குரல் எழுப்பினர். அவர்களைக் கட்டுப்படுத்த சபாநாயகர் எடுத்த முயற்சிகள் வெற்றியடையவில்லை. அதைத் தொடர்ந்து சபையைப் 10 நிமிடங்களுக்கு ஒத்தி வைத்துவிட்டு வெளியேறினார் சபாநாயகர்.

## நீதிவான்கள், நீதிபதிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது

நீதிவான்கள், நீதிபதிகள் உள்ளிட்ட 106 நீதித்துறை அதிகாரிகள் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக நீதிச்சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நீதிவான்கள், நீதிபதிகள் உள்ளிட்ட 106 நீதித்துறை அதிகாரிகளுக்கு எதிர்வரும் 15ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் நீதிச் சேவை ஆணைக்குழுவால் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நீதிவான்கள், மேலதிக நீதிவான்கள், மாவட்ட நீதிபதிகள், மேலதிக மாவட்ட நீதிபதிகள் மற்றும் பதிவாளர்களுக்கு இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகக் தெரியவந்துள்ளது.

மேற்படி பணி இடமாற்றத்துக்கமைய, மாளிகாகந்த நீதிவான் லோச்சனா அபேவிக்ரம வீரசிங்க, மஹர நீதிதவான் நீதிமன்றத்திற்கும், மஹர நீதிவான் எச்.ஜி.ஜே.ஆர். பெரேரா, மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்திற்கும் மாற்றப்பட்டுள்ளனர். காலி நீதிவான் ஐ.என்.என். குமார கமகே, கோட்டை நீதிவானாகவும், குருநாகல் நீதிவான் என்.டி. குணரத்ன, கம்பஹா மேலதிக மாவட்ட நீதிபதியாகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு மேலதிக நீதிவான் பி.எஸ். பத்திரன, பலபிட்டிய நீதிவானாகவும், ஆர்.டி. ஜனக, கொழும்பு மேலதிக நீதவானாகவும் மாற்றப்பட்டுள்ளனர் என்று நீதிச்சேவை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, நீதித்துறை பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்ற 17 நீதிவான்கள், மேலதிக நீதிவான்கள் மேலதிக மாவட்ட நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் நீதிச்சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.09.2025இல் வெளியிடப்பெற்றது